



# நூல்தேட்டத்தில்

## கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன்



என். செல்வராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்தேட்டத்தில்
## கலாபூஷணம்
## பீ.எம். புன்னியாமீன்
### (ஒரு நூல் விபரப்பட்டியல்)

- என்.செல்வராஜா -

வெளியீடு:
வரையறுக்கப்பட்ட 'சிந்தனை வட்டம்' வெளியீட்டாளர்கள்
(தனியார்) கம்பனி
இல 14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை 20802, ஸ்ரீலங்கா.
தொலைபேசி 0094-81-2493746
தொலைநகல் 0094-81-2497246

'சிந்தனை வட்டத்தின் 244வது வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்தேட்டத்தில் கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன்

(ஒரு நூல் விபரப்பட்டியல்)

ஆசிரியர் : என். செல்வராஜா (ஐக்கிய இராச்சியம்)
பதிப்பு : 1ம் பதிப்பு - மார்ச், 2007
வெளியீடு : **சிந்தனை வட்டம்.**
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை,
ஸ்ரீலங்கா.
அச்சுப்பதிப்பு : சிந்தனை வட்டம் அச்சீட்டுப் பிரிவு
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை,
ஸ்ரீலங்கா.
முகப்பட்டை : சஜீர் அஹ்மட் (உடத்தலவின்னை)
ISBN : 978-955-8913-69-7
பக்கங்கள் : 128
விலை : 200/- £ 5.00

**Noolthettaththil Kalabooshanam P.M. Puniyameen**

Title : Kalabooshanam P.M.Puniyameen in Noolthettam: a bibliography

Author : N. Selvarajah (U.K)
Printers & Publishers : **Cinthanai Vattam**
CV Publishers (Pvt) Ltd, 14, Udatalawinna Madige,
Udatalawinna 20802, Sri Lanka.
Edition : 1st Edition March, 2007
Language : Tamil
Cover Designing : Sajeer Ahmad (Udatalawinna)
ISBN : 978-955-8913-69-7
Pages : 128
Price : 200/- £ 5.00

**Copy right: © N.Selvarajah, 2007**

All Rights Reserved. No part of this Documentation may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the copy right owner.

# பதிப்புரை

சிந்தனைவட்டத்தின் 244வது வெளியீடாக 'நூல்தேட்டத்தில் கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன்' எனும் இந்நூலினை வெளியிடுவது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

தமிழ்மொழி மூலமாக இலங்கையி லிருந்தும், புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்தும் வெளிவரும் ஈழத்தவர்களின் நூல்களை ஒன்றுதிரட்டி 'நூல்தேட்டம்' எனும் பெயரில் ஈழத்துத் தமிழ் நூல்களின் சர்வதேச ஆவணப்பதிவினை வெளியிட்டு வரும் திருவாளர். என். செல்வராஜா அவர்க ளுடைய முதல் ஐந்து தொகுதிகளிலும் 'கலாபூஷணம் புன்னியாமீன்' இதுவரை எழுதி வெளியிட்ட 110 நூல்களின் விபரங்களும் பதிவாகியிருந்தன. தனிப் பட்ட முறையில் எழுத்தாளரொருவரினால் எழுதப்பட்ட 100 நூல்களுக்கு மேல் 'நூல்தேட்டத்தில்' பதிவானது இதுவே முதற்தடவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படையில் நூல்தேட்டத்தில் பதிவான கலாபூஷணம் புன்னியாமீனின் 110 புத்தகப் பதிவுகளையும் தனிப்புத்தகமாக வெளியிட வேண்டும் என்ற நூலாசிரியரின் விருப்புக்கமையவே இத்தொகுதி வெளிவருகின்றது. எதிர்காலத்தில் இதுபோன்ற 'நூல்தேட்டத்தின்' துணை நூல்களை வாசகர்கள் எதிர்பார்க்கலாம்.

பல்வேறுபட்ட கடமைச்சுமைகளுக்கு மத்தியிலும் இந்நூலினைத் தொகுத்துத் தந்த திருவாளர். என். செல்வராஜா அவர்களுக்கு சிந்தனைவட்டத்தின் சார்பில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

சிந்தனைவட்டத்தின் ஏனைய வெளியீடுகளுக்கு ஆதரவினைத் தரும் வாசக நெஞ்சங்களான நீங்கள் இந்நூலுக்கும் ஆதரவு தருவீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

மிக்கநன்றி

**சஜீர் அஹமட்**
(பணிப்பாளர்)

**வரையறுக்கப்பட்ட 'சிந்தனை வட்டம்' வெளியீட்டாளர்கள் (தனியார்) கம்பனி**
இல 14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை 20802, ஸ்ரீலங்கா.
தொலைபேசி 0094-81-2493746
தொலைநகல் 0094-81-2497246



# முன்னுரை

இலங்கையில் தமிழ்பேசும் மக்களின் கலை, கலாசாரம், பண்பாடு, வரலாறு போன்றவற்றைப் பதிவாக்கும் பணியில் நூற்றாண்டு காலமாக எம்மவர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்கள் படைத்துச் சென்ற பல நூல்கள் ஆங்காங்கே நூலகங்களிலும் தனியார் இல்லங்களிலும் ஒதுங்கி விட்ட நிலையில், அண்மைக்காலம் வரையில் அவை பற்றிய முழுமையான பதிவெதுவும் இல்லாத நிலைமையே காணப்பட்டு வந்துள்ளது.

இலங்கைத் தேசிய நூலகம் ஈழத்தமிழரின் தமிழ் நூல்களை முழுமையாகப் பதிவுசெய்துவைக்கவோ, தேடிப்பாதுகாத்துப் பேணவோ தவறிவிட்டது. பெயரளவில் தேசிய நூல்விபரப்பட்டியல் மாதாந்தம் வெளியிடப்பட்டு வந்தாலும், பல்வேறு காரணங்களினால் அது இன்று மடைதிறந்த வெள்ளம்போல உலகெங்கும் வெளியீடு கண்டுவரும் ஈழத்தமிழரின் நூல்களைத் தேடிப்பெற்றுப் பதிவுசெய்யும் திறன் அற்றதாகவே காணப்படுகின்றது. பல்கலைக்கழகங்களும், பிற பிரதான பொது நூலகங்களும்கூட இந்த ஆவணவாக்கும் திட்டங்களில் அதிக ஈடுபாடு காட்டுவதில்லை.

இந்நிலையில் ஈழத்தமிழர்களின் ஒரேயொரு நூலியல் பதிவாக நூல்தேட்டம் அமைந்திருக்கின்றது. இதுவரை நான்கு தொகுதிகளை ஒவ்வொன்றிலும் ஆயிரம் தமிழ் நூல்கள் வீதம் விரிவான பதிவுக்குள்ளாக்கித் தன் ஐந்தாவது தொகுதியின் தொகுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள இவ்வேளையில் ***'நூல்தேட்டத்தில் கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன்'***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற இந்நூல் வெளிவருகின்றது.

பீ.எம்.புன்னியாமீன் பற்றியோ, இவரது வெளியீட்டகமான சிந்தனைவட்டம் பற்றியோ ஈழத்தின் வெளியீட்டுத் துறையில் ஈடுபடு வோர் அறியாதிருக்கமாட்டார்கள். இன்றுவரை 243 நூல்களை வெளியிட்டு வைத்துள்ள பீ.எம். புன்னியாமீன் - மஸீதா புன்னியாமீன் தம்பதியினரின் எழுத்தியல் யாகம் குறிப்பிடத்தக்கதாகும். இது பற்றிய விரிவான கட்டுரையொன்றும் இந்நூலில் காணப்படுகின்றது.

இவ்விலக்கியத் தம்பதியினரின் படைப்புக்கள் அனைத்தும் நூல் தேட்டத்தில் விரிவாகப் பதிவுக்குள்ளாகியுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். பிரித்தானிய நூலகம் உள்ளிட்ட உலகளாவிய நிலையில் தமிழியல் துறையைக் கொண்டுள்ள பிரதான நூலகங்களிலெல்லாம் **நூல்தேட்டம்** உசாத்துணைத் தொகுதியாகப் பேணப்பட்டு வருகின்றது. இந்நிலையில் எம்மவர்களது தாயகப் படைப்புக்களும் நூல்தேட்டம் தொகுதிகளின் வாயிலாக உலகளாவிய ரீதியில் நிரந்தரமான நூலியல் வரலாற்றுப் பதிவினைப் பெற்றுவிட்டன.

இந்நிலையில், மேலும் பரந்த வாசகர் வட்டத்தை இவை சென்ற டைய வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், நூல்தேட்டம் முதல் ஐந்து தொகுதிகளில் இடம்பெறும் கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன் தனித்தும், துணைவியாருடன் இணைந்தும் எழுதிய 110 நூல்களின் விபரங்களைத் தனியானதொரு நூற்பட்டியலாகத் தயாரித்துள்ளோம்.

எதிர்காலத்தில் பீ.எம்.புன்னியாமீனின் ஈழத்து இலக்கிய, வெளியீட்டுத்துறைப் பங்களிப்புகள் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் எவருக்கும் இது ஒரு மூலாதார நூலாக அமையலாம். இந்நூல் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற்பிரிவில், நூல் பற்றிய பிரதான பதிவுகள் பாடஒழுங்கில் வகைப்படுத்தப்பட்டு தொடரெண்கள் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளன. பாடவாரியாக ஒரு நூலைத்தேடும் வாசகர் இப்பிரிவின் மூலம் பயனடைவர்.

இரண்டாவது பிரிவு, தலைப்பு வழிகாட்டியாகும். முதற்பகுதியில் நூல்கள் பாடவாரியாக முதலில் ஒழுங்குபடுத்தப்பட்டு, பின்னர் அத்துறை யின் கீழ் அகரவரிசையில் காணப்படுவதால் ஒரு நூலின் தலைப்பைக் கொண்டு நூலைத் தேடவிளையும் வாசகர் இரண்டாவது பிரிவில்



அகரவரிசையில் காணப்படும் தலைப்பு வழிகாட்டியின் வாயிலாக நூலின் தொடர் இலக்கத்தைக் கண்டறிந்து முதற்பகுதியில் உள்ள பிரதான பதிவைப் பார்வையிட முடியும்.

மூன்றாவது பிரிவில் நூல் வெளியீடு கண்ட ஆண்டு ஒழுங்கில் நூலின் தலைப்பும் தொடர் இலக்கமும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

பிரதான பகுதியில் நூல் பற்றிய தகவல் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. முதற்பகுதியில் நூலின் தலைப்பு, உப தலைப்பு, அந்நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வ உரித்துடைய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் விபரங்கள், வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம், ஆகியனவும் அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்ட நூலின் குறித்த பதிப்பிற்கான அச்சகத்தின் விபரமும் தரப்பட்டுள்ளன. கிடைக்கப் பெறுமி டத்து சர்வதேச தராதர நூல் எண்களும் இப்பகுதியில் இடம்பெறுகின்றன.

நூலின் வெளியீட்டாளர் பற்றிய தகவல் குறிப்பில் வெளியீட்டாளரின் இயங்குதளம், வெளியீட்டகத்தின் பெயர், முகவரி என்பன குறிப்பிடப் பட்டுள்ளன. நூலின் பதிப்பு விபரத்தில், பதிவுக்குப் பெறப்பட்ட நூலின் பதிப்பு விபரமும், அப்பதிப்பு வெளியிடப்பட்ட திகதியும் குறிப்பிடப் பட்டுள்ளன. குறிப்பிட்ட நூல் முதற்பதிப்பு அல்லாதவிடத்து முன்னைய பதிப்புகள் பற்றிய திகதி விபரங்களும் நூலில் தரப்பட்டவாறாகப் பதியப்பட்டுள்ளன. நூலின் அச்சக விபரம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது. இந்த விபரம் பதிவுக்குரிய நூலின் குறித்த பதிப்புக்கு மட்டும் உரியதாகும் என்பதும் கவனத்துக்குரியது.

நூலியல் பதிவின் இரண்டாவது பகுதியாக அமைவது நூலின் பௌதீகத் தகவல்களாகும். இதில் நூலின் பக்கங்கள், சிறப்பம்சங்கள், விலை, அளவு, தராதர எண் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. நூலின் பக்கங்கள் மூன்று வகையில் குறிப்பிடப்படுகின்றன. அவை ரோமன் இலக்கமிடப்பட்ட பக்கங்கள், இலக்கமிடப்படாத பக்கங்கள், அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்கள் என்பனவாகும். ரோமன் இலக்கமும், அரேபிய இலக்கமும் இடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை அவ்வவ் விலக்கங்களாலேயே சுட்டப்பட்டுள்ளன. இலக்கமிடப்படாத பக்கங்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன. (உதாரணம்: VII, (12), 243 பக்கம்). பெரும்பான்மையான தமிழ் நூல்களில் முகவுரைப் பக்கங்கள் இலக்கமிடப்படாவிடினும் அவை பின்னர் அரேபிய இலக்கங்களாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்கின்றன. அத்தருணங்களில் அவை அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்களாகவே கருதப்பட்டுள்ளன. பக்கங்கள் பற்றிய குறிப்பை அடுத்து அமைவது சிறப்பம்சங்களாகும். இங்கு வரைபடங்கள், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள் பற்றிய குறிப்புகள் காணப்படும். விலை விபரம் காலவரையறைக்குட்பட்டதாக அமைவதாயினும் வரலாற்றுத் தேவை கருதி மட்டுமே நூல் தேட்டத்தில் அவை சேர்க்கப்பட்டுள்ளது. நூலின் பௌதீக விபரங்களில் அடுத்ததாக வருவது, நூலின் அளவாகும். இது சதம மீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரிவில் இறுதியாக அமைவது நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number) பற்றிய தகவலாகும். ஈழத்துத் தமிழ் நூல்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்களே இவ்விலக்கத்தைத் தாங்கி வெளிவந்திருப்பினும், அதிகரித்து வரும் அதன் முக்கியத்துவம் கருதி இவ்விலக்கம் இப்பிரிவில் இடம்பெறுகின்றது. எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் பயன்பாடு கருதி ISBN பற்றிய விரிவான கட்டுரையொன்று முதலாவது தொகுதியில் xiv-xviii பக்கங் களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நூலியல் தகவலின் மூன்றாவது, இறுதிப்பிரிவு நூல்பற்றிய சுருக்கக் குறிப்பாகும். இது ஒரு திறனாய்வுக் குறிப்பாகவோ, விளம்பரமாகவோ அல்லாது நூலினதும் நூலாசிரியரினதும் சிறு அறிமுகமாக மாத்திரம் அமைவது குறிப்பிடத்தக்கது.

நூல்தேட்டம் ஒவ்வொன்றும் 400 முதல் 500 பக்கங்கள் கொண்ட தொகுதிகளாகும். இவற்றில் இடம்பெறும் பதிவுகள் மேலதிக வாசகர்களை சென்றடையும் நோக்குடன் தனித்தனித் தேர்ந்த நூற்பட்டியல்களாக எதிர்காலத்தில் உருவாக்கப்படும் சாத்தியக்கூறு உள்ளது. இதன் முன்னோடியாக இந்நூல் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

**என்.செல்வராஜா**
*தொகுப்பாளர்- நூல்தேட்டம்*
*ஐக்கிய இராச்சியம்.*

**N. SELVARAJAH**
**48, HALLWICKS ROAD**
**LUTON, BEDFORDSHIRE**
**LU2 9BH, U.K.**
**T/P : 0044 1582 703 786**





# நூலாசிரியர் பற்றி

நிறுவன ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பெரும் பணியொன்றினை, தமிழரான தனியொருவரால் மேற்கொள்ளவும் முடியும் என்பதை செயலில் காட்டி சாதனை படைத்து வருபவர் மூத்த நூலகவியலாளரான திரு. என்.செல்வராஜா அவர்கள். ஈழத்தவரின் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தும் பணியை 1990இல் தொடங்கி 2006 வரை நான்கு தொகுதிகளை, ஒவ்வொன்றிலும் ஆயிரம் நூல்களாக ''நூல்தேட்டம்'' என்ற பெயரில் இவர் வெளியிட்டுள்ளார்.

மேலும், இலங்கையில் வெளியான 150 சிறப்புமலர்களின் விபரங்களைத் தொகுத்து சிறப்பு மலர்களுக்கான வழிகாட்டி (தொகுதி 01) எனும் நூலை எழுதியதனூடாக ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் மற்றுமொரு பக்கத்துக்கு இவர் உரித்துடையவராகின்றார். (இந்நூலினை வெகுவிரைவில் அயோத்தி நூலக சேவைகளுடன் இணைந்து சிந்தனை வட்டம் வெளியிடவுள்ளது)

1970களில் இலங்கை நூலகச் சங்கத்தின் நூலகவியல் நூலக விஞ்ஞானத் துறையில் டிப்ளோமா பயிற்சி பெற்ற இவர், சுன்னாகம் இராமநாதன் பெண்கள் கல்லூரி, சர்வோதய யாழ். மாவட்ட நூலகம் ஆகியவற்றில் பணியாற்றிய பின்னர் இலங்கை உள்ளூராட்சி அமைச்சின் நூலகர் பதவியை ஏற்று சிலகாலம் திருமலை மாவட்டத்திலும் பதவி வகித்தார்.

1981 பெப்ரவரியில் ஐக்கிய நாடுகள் சபையின் UNDP Volunteer Project இன் கீழ் இந்தோனேஷியாவிற்கு கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதியாகச் சென்று, அங்குள்ள பண்டுங் மாநிலத்தில் கிராம நூலகத் திட்டமொன்றை வெற்றிகரமாக அறிமுகம் செய்து வைத்தார்.

1982இல் நாடு திரும்பிய பின்னர், இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்தின் யாழ். மாவட்ட மத்திய நூலகப் பொறுப்பாளராகப் பதவியேற்று 12 ''கிளை நூலகங்களை'' UNESCO திட்டத்தின் உதவியுடன் உருவாக்கியிருந்தார். 1983 இல் திருநெல்வேலியில் அமைக்கப்பட்ட ஈவ்லின் இரத்தினம் பல்லினப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டியல் நிறுவனத்தின் ஆய்வு நூலகப் பொறுப்பாளர் பதவியை ஏற்று இவர் குடாநாட்டின் போர்ச் சூழலால் 1990இல் கொழும்பிற்கு குடும்பத்துடன் இடம்பெயர்ந்தார். அங்கும் International Centre for Ethnic Studies, இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு, கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் நூலகப் புனரமைப்பைப் பொறுப்பேற்று அந்நிறுவன வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியிருந்தார்.

யாழ்ப்பாணப் பொதுநூலக ஆலோசனைக் குழு உறுப்பினர், இலண்டன் தமிழர் தகவல் நிலைய நூலக சேவைகளின் ஆவணக் காப்பகப் பிரிவின் இயக்குநர், ஜேர்மனியிலுள்ள சர்வதேச புலம்பெயர் எழுத்தாளர் சங்க ஆலோசகர், ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கக் காப்பாளர், அயோத்தி நூலக சேவையின் ஸ்தாபகர்-நிர்வாக இயக்குநர் என்னும் பல பதவிகளை சமூக நோக்குடன் வகித்துவந்துள்ள திரு. செல்வராஜா, நூல்தேட்டம் 5வது தொகுதியின் தொகுப்புப் பணியினையும், ஈழத்தமிழரின் ஆங்கில நூல்களைப் பட்டியலிடும் பணியினையும், மலேஷிய எழுத்தாளர் சங்கத்துக்காக, மலேசிய நூல்தேட்டம் ஒன்றினைத் தொகுத்து வெளியிடும் பணியினையும் தற்போது மேற்கொண்டுள்ளார். இங்கிலாந்தின் லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் IBC அனைத்துலக ஒலிபரப்புச் சேவையில் வாராந்த ''காலைக் கலசம்'' இலக்கியத் தகவல் திரட்டினை 2002 முதல் வழங்கி வருகிறார். தாயகத்திலும் புகலிடத் திலும் ஊடகங்களில் பல கட்டுரைகளைத் தொடர்ச்சியாக எழுதி வருகின் றார்.

நூல்தேட்டம் (நான்கு தொகுதிகள்), உருமாறும் பழமொழிகள், கிராம நூலகங்களின் அபிவிருத்தி, நூலகப் பயிற்சியாளர் கைநூல், கிராம நூலகப் பொறுப்பாளர்களுக்கான கைநூல், நூலகர்களுக்கான வழிகாட்டி, சனசமூக நிலையங்களுக்கான கைநூல், ஆரம்ப நூலகர் கைநூல், யாழ்ப்பாணப் பொது நூலகம்- ஒரு வரலாற்றுத் தொகுப்பு, மலேசியத் தமிழ் இலக்கியம் (தேசம் சிறப்பிதழ்), நூலியல் பதிவுகள், A select Bibliography of Dr. James T.Rutnam, Rising from the Ashes, ஆகியவை திரு செல்வராஜா அவர்களால் இலங்கையிலும், இங்கிலாந்திலும் எழுதி வெளியிடப்பட்ட நூல்களில் சிலவாகும்.

திரு செல்வராஜாவின் நூலக சேவை, எழுத்துப்பணி, வெளியீட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கௌரவிக்கும் வகையில் 2004இல் கனடாவின் ''தமிழர் தகவல்'' சிறப்பு விருதும், 2005இல் இலங்கையில் சிந்தனை வட்டத்தினால் ''எழுத்தியல் வித்தகர்'' விருதும் வழங்கப்பட்டன. தற்போது தமது குடும்பத்துடன் புலம்பெயர்ந்து இங்கிலாந்தில் வசித்து வரும் இவர் பிரித்தானியாவின் (Royal Mail) தபால்துறையின் அந்நிய நாணயப் பிரிவில் உயர் அதிகாரியாகப் பணியாற்றுகின்றார்.



# உள்ளே...


| | | |
|---|---|---|
| 000 | பொது அறிவு | 13 |
| 010 | நூலியல், நூல்விபரப்பட்டியல் | 18 |
| 050 | பொதுப் பருவ இதழ்கள், சிறப்பிதழ்கள் | 20 |
| 301 | சமூகவியல் | 21 |
| 320 | அரசறிவியல் | 22 |
| 370 | புலமைப்பரிசில் பரீட்சைக் கைநூல்கள் | 36 |
| 420 | ஆங்கில மொழி | 62 |
| 494.8(2) | தமிழ்ப் பாட நூல்கள் | 62 |
| 500 | தூய விஞ்ஞானம் | 63 |
| 510 | கணிதம் | 65 |
| 796 | உடற்பயிற்சி, விளையாட்டுக்கள் | 66 |
| 894.8(1) | தமிழ்க் கவிதைகள் | 67 |
| 894.8(4) | தமிழ்ச் சிறுகதைகள் | 69 |
| 894.8(5) | தமிழ் நாவல்கள் | 74 |
| 894.8(6) | இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வுகள் | 75 |
| 900 | புவியியல், வரலாறுகள் | 77 |
| 920 | வாழ்க்கை வரலாறு, ஞாபகார்த்த மலர்கள் | 83 |
| 922 | சமயத் தலைவர், சிந்தனையாளர் | 89 |
| 928 | இலக்கிய அறிஞர்கள் | 90 |
| 950 | ஆசிய வரலாறு | 90 |

நூல் தலைப்பு வழிகாட்டி 92
ஆண்டு வாரியான வெளியீடு - நூல் தலைப்பு வழிகாட்டி 96
மலயகப் பதிப்புலகில் - ஒரு சிந்தனைவட்டம் 106
சிந்தனைவட்டம் - ஓர் ஆய்வு 113




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைவட்டம்

நாளைய சந்ததியின் இன்றைய சக்தி





# 000 பொதுப் பிரிவு

## 000 பொது அறிவு

**01**

**அறிமுக சுற்றாடல் கல்வியும் பொது அறிவும்.** பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, ஜுன் 1997. (Colombo 12: AICO Ltd., 218/5, Messenger Street)
80 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x13.5 சமீ.



புன்னியாமீன்-மஸீதா தம்பதியினர் இணைந்து வெளியிட்டுள்ள புலமைப்பரிசில் தரம் 5 பாடவழிகாட்டி நூல் இது. பாடப்பரப்பில் இடம் பெறும் அறிமுக சுற்றாடல் கல்வியும், பொது அறிவு விடயங்களும் இந்நூலில் சேர்க்கப் பட்டுள்ளன. ஆரம்ப வகுப்பு மாணவர்கள் இலகுவாகவும், சுயமாகவும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் இந்நூல் எழுதப் பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். இது சிந்தனை வட்டத்தின் 69வது வெளியீடாகும். **(நூல்தேட்டம் பதிவிலக்கம் 2337)**

**02**

**பொது அறிவு - நிகழ்காலத் தகவல் துளிகள் (தொகுதி 01).** பீ.எம். புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2006. (உடத்தலவின்னை, 20802: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்னை மடிகே)
40 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 60., அளவு 21x14.5 சமீ. (ISBN : 955-8913-58-8)

சமகால பொதுஅறிவு விடயங்களை இந்நூல் தொகுத்துத் தந்துள்ளது. தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் முக்கியத்துவம் பெற்ற பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகள் சுருக்கமாகவும், தெளிவாகவும் இந்நூலில் சேர்க்கப் பட்டுள்ளன. இந்நூல் சிந்தனைவட்டத்தின் 233வது வெளியீடாகும். (நூல்தேட்டம் தொகுதி 5)







## 03

**பொது அறிவுச்சரம் (தொகுதி 01).** பீ.எம். புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2006, (உடத்தலவின்னை, 20802: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்னை மடிகே) 40 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள். விலை : ரூபா 60., அளவு 21x14.5 சமீ. (ISBN : 955-8913-50-2)

இலங்கையில் நடைபெறக்கூடிய போட்டிப் பரீட்சைகளை எழுதவுள்ள மாணவர்களின் நலன்கருதியும், பொதுஅறிவினைக் கற்க ஆர்வமுள்ளவர்களின் தேவையினைக் கருத்திற் கொண்டும் எழுதப் பட்டுள்ள இந்நூலில் இலங்கை வரலாற்றில் நீர்வள, நாகரீக, பொது அறிவு விடயங்களும், நிகழ்காலப் பொது அறிவு விடயங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. சிந்தனைவட்டத்தின் 226வது வெளியீடாக வெளி





வந்துள்ள இந்நூல் நூலாசிரியர் புன்னியாமீனால் எழுதப்பட்ட 97வது நூலாகும். (நூல்தேட்டம் தொகுதி 5)

## 04

**பொது அறிவுச்சரம் (தொகுதி 02).** பீ.எம். புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2006, (உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு , 14, உடத்தலவின்னை மடிகே) 40 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள். விலை: ரூபா 60., அளவு 21x14.5 சமீ. (ISBN : 955-8913-51-0)

இலங்கையில் நடைபெறக்கூடிய போட்டிப் பரீட்சைகளை எழுதவுள்ள மாணவர்களின் நலன்கருதியும், பொதுஅறிவினை கற்க ஆர்வமுள்ள வர்களின் தேவையினைக் கருத்திற் கொண்டும் எழுதப்பட்டுள்ள இந்நூலில் இலங்கையில் பொலன்னறுவை யுகத்தைச் சேர்ந்த பொதுஅறிவு நிகழ்வுகளும், இலங்கையை ஆட்சிபுரிந்த மன்னர்களின் சுருக்க வரலாறுகளும், மொழி, இலக்கியம், சட்டக்கலை, சிற்பக்கலை போன்ற விடயங்களும் தரப்பட்டுள்ளன. இது சிந்தனை வட்டத்தின் 227வது வெளியீடாகும். (நூல்தேட்டம் தொகுதி 5)

## 05

**பொது அறிவுச்சரம் (தொகுதி 03).** பீ.எம். புன்னியாமீன், உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2006. (உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்னை மடிகே) 40 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள். விலை : ரூபா 60., அளவு 21x14.5 சமீ. (ISBN : 955-8913-52-9)

இலங்கையில் நடைபெறக்கூடிய போட்டிப் பரீட்சைகளை எழுதவுள்ள மாணவர்களின் நலன்கருதியும், பொதுஅறிவினைக் கற்க ஆர்வமுள்ள வர்களின் தேவையினைக் கருத்திற் கொண்டும் எழுதப்பட்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்து அரசியல், பொருளாதார, சமய, சமூக, கலாசார நிகழ்வுகளின் முக்கியத்துவம் பெறும் அம்சங்கள் சுருக்கமாக பொதுஅறிவு வடிவில் தரப்பட்டுள்ளன. இந்நூல் புன்னியாமீன் எழுதி வெளியிட்ட 99வது நூலாகும். இது சிந்தனைவட்டத்தின் 228வது வெளியீடாக வெளிவந்துள்ளது. (நூல்தேட்டம் தொகுதி 5)







## 06

**பொது அறிவுச்சரம் (தொகுதி 04).** பீ.எம். புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2006. (உடத்தலவின்னை, 20802: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்னை மடிகே) 40 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள். விலை: ரூபா 60., அளவு 21x14.5 சமீ. (ISBN : 955-8913-53-7)

இலங்கையில் நடைபெறக்கூடிய போட்டிப் பரீட்சைகளை எழுதவுள்ள மாணவர்களின் நலன்கருதியும், பொதுஅறிவினை கற்க ஆர்வமுள்ள வர்களின் தேவையினைக் கருத்திற் கொண்டும் எழுதப்பட்டுள்ள











இந்நூலில் புராதன இலங்கையின் வெளிநாட்டு உறவுகளும், அரசியல் தாபனங்கள், சமூகத் தாபனங்களும், நவீன காலத்தில் சர்வதேச ரீதியில் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகளின் விபரங்களும், நிகழ்கால விளையாட்டுத் தகவல்களும் இணைக்கப் பட்டுள்ளன. இந்நூல் சிந்தனைவட்டத்தின் 229வது வெளியீடாக வெளி வந்துள்ளது. (நூல்தேட்டம் தொகுதி 5)

## 07

**பொது அறிவுச்சரம் (தொகுதி 05).** பீ.எம். புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2006. (உடத்தலவின்னை 20802: சிந்தனைவட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்னை மடிகே) 40 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள். விலை: ரூபா 60., அளவு 21x14.5 சமீ. (ISBN : 955-8913-56-1)

இலங்கையில் நடைபெறக்கூடிய போட்டிப் பரீட்சைகளை எழுதவுள்ள மாணவர்களின் நலன்கருதியும், பொதுஅறிவினைக் கற்க ஆர்வமுள்ள வர்களின் தேவையினைக் கருத்திற் கொண்டும் எழுதப்பட்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் இலங்கையின் முக்கியமான நிகழ்காலத் தரவு கள, இலங்கை வரலாற்றில் முக்கியமான ஆண்டுகளும், முக்கிய நிகழ்வுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. (நூல்தேட்டம் தொகுதி 5)

### 08

**பொது அறிவுச்சரம் (தொகுதி 06).** பீ.எம். புன்னியாமீன், உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2006. (உடத்தலவின்னை 20802: சிந்தனைவட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்னை மடிகே) 40 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள். விலை: ரூபா 60., அளவு 21x14.5 சமீ. (ISBN : 955-8913-57-x)




இலங்கையில் நடைபெறக் கூடிய போட்டிப் பரீட்சைகளை எழுதவுள்ள மாணவர்களின் நலன் கருதியும், பொதுஅறிவினை கற்க ஆர்வமுள்ள வர்களின் தேவையினைக் கருத்திற் கொண்டும் எழுதப்பட்டுள்ள இந் நூலில் சர்வதேச ரீதியில் அண்மைக் காலமாக இடம்பெற்ற முக்கிய விடயங்களும், முக்கிய தலைவர்கள், நூல்கள் என்பன பற்றிய விடயங்க ளும் சேர்க்கப்பட்டுள்ளன. (நூல் தேட்டம் தொகுதி 5)

## 010 நூலியல், நூல்விபரப்பட்டியல்

### 09

**இலக்கிய விருந்து.** பீ.எம். புன்னியாமீன். கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, 1987. (சென்னை: பசுங்கதிர் பதிப்பகம், 43, முத்துமாரி வீதி)
96 பக்கம். விலை: இந்திய ரூபா 6., அளவு: 18x12 சமீ.











கண்டி தமிழ் மன்றம் வெளியிட்ட 30 நூல்கள் பற்றிய இவ் விபரப்பட்டியலில், நூலின் பௌதிக விபரங்களும் நூலின் உள்ளடக்கம் பற்றிய சுருக்கக் குறிப்பும் தரப்பட்டுள்ளன. அடுத்து வெளிவரவிருந்த ஆறு நூல்கள் பற்றிய முன்னோடித் தகவல் குறிப்பும் உள்ளது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 003)

### 10

**இலக்கிய உலா.** பீ.எம்.புன்னியாமீன். சென்னை 600001: மில்லத் பப்ளிகேஷன்ஸ், 16, அப்பு மேஸ்திரி தெரு, 1வது பதிப்பு, மே 1987. (Madras 600001: Millath Printers, 16, Appu Maistry Street).
148 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 20., அளவு: 18x12.5 சமீ.

கல்ஹின்ன தமிழ்மன்றம்' என்ற நூல் வெளியீட்டகத்தின் ஸ்தாபகர் S.M.ஹனிபா அவர்களது வாழ்க்கை வரலாறு, மற்றும் அவரது நூல்கள் பற்றிய ஓர் ஆய்வு இங்கு இலக்கிய நயத்துடன் சொல்லப்படு கின்றது. நுழைவாயில், குன்றின் மேல் ஒரு தீபம், இலக்கிய வானில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புது நிலவு, விளையும் பயிரை, மௌனமாய்ப் பெய்யும் மழை, நீங்காத நினைவலைகள், சுருதி விலகாத ராகம், இலக்கியக் குயிலின் இலட்சியக் குரல், இதயத்தின் உதயம் ஆகிய தலைப்புகளின் கீழ் எஸ்.எம். ஹனிபா அவர்களின் வாழ்க்கை வரலாறு விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2809)

## 050 பொதுப் பருவ இதழ்கள், சிறப்பிதழ்கள்,

### 11

**மத்திய மாகாண முஸ்லிம் கலாசார, கலைஞர்கள் கௌரவிப்பு விழா-1999.** பீ.எம்.புன்னியாமீன் (தொகுப்பாசிரியர்). கண்டி: மத்திய மாகாண சபையின் முஸ்லிம் சமய விவகார அமைச்சு, த.பெ. இலக்கம் 65, பேராதனை, 1ஆவது பதிப்பு, டிசம்பர் 1999. (கட்டுகாஸ்தோட்டை: ஜே.ஜே. அச்சகம், 122 கலகெதர வீதி). 96 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.



இலங்கையில் "மாகாணசபை முறை" அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு மாகாண ரீதியான முஸ்லிம் கலாசார, கலைஞர் கௌரவிப்பு விழா மத்திய மாகாணத்தில் இன்றுவரை ஒரே ஒரு தடவை மாத்திரம் நடைபெற்றுள்ளது. மத்திய மாகாண சபையின் முஸ்லிம் சமய விவகார அமைச்சின் இணைப்புச் செயலாளராக ஜனாப் பீ.எம்.புன்னியாமீன் பணியாற்றிய காலகட்டத்தில் 1999இல் இவ்விழா ஒழுங்குசெய்யப்பட்டது. இவ் விழாவில் கௌரவிக்கப்பட்ட 15 முஸ்லிம் எழுத்தாளர்கள், கலைஞர்கள் பற்றிய விபரங்களும், ஐந்து தமிழ், சிங்கள எழுத்தாளர்கள், கலைஞர்களின் விபரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. வர்த்தக விளம்பரங்கள் அற்று காத்திரமான பயனுள்ள பல இலக்கியக் கட்டுரைகளுடன் இம்மலர் வெளிவந்துள்ளது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2896)





# சமூக விஞ்ஞான நூல்கள்

## 301 சமூகவியல்

### 12

**நாமும் சுற்றாடலும்: தொகுதி 1.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, உடத்தலவின்ன, 1ஆவது பதிப்பு, ஏப்ரல் 1998. (கட்டுகஸ்தொட்ட: ஜே.ஜே. பிரின்டர்ஸ், 122, குருநாகலை வீதி)
80 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ.





புலமைப்பரிசில் வழிகாட்டித் தொடர் 6. ஆண்டு 4, 5 புதிய பாடத் திட்டத்தை உள்ளடக்கியது. இத்தொகுதி எமது அயலில் காணப்படும் தாவரங்கள், பிராணிகள், சுற்றாடலின் கோலங்கள், புவியும் வானும், வேலைகளை இலகுவாக்கும் முறைகள், எமது உணவு, எமது பரிபாலன முறைகள் ஆகிய பாட அலகுகளை உள்ளடக்கியுள்ளது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2342)

### 13

**நாமும் சுற்றாடலும்: தொகுதி 2.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, உடத்தலவின்ன, 1ஆவது பதிப்பு, மே 1998. (கட்டுகஸ்தொட்ட:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.ஜே.பிரின்டர்ஸ், 122, குருநாகலை வீதி)
48 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ.

புலமைப் பரிசில் வழிகாட்டித் தொடர் 7. ஆண்டு 4, 5 புதிய பாடத் திட்டத்தை உள்ளடக்கியது. பழக்க வழக்கங்களும் பொறுப்புக்களும், நாமும் போக்குவரத்தும், நாம் எவ்வாறு வளர்கிறோம், எமது வளர்ச்சிக்குத் தடையாக அமைவன, பொது அறிவு விடயங்கள் ஆகிய பாட அலகுகளை இத்தொகுதி உள்ளடக்கியுள்ளது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2343)

மேலும் பார்க்க: அறிமுக சுற்றாடல் கல்வியும் பொது அறிவும். பதிவிலக்கம் 01

## 320 அரசறிவியல்

### 14

**அரசறிவியல்.** பீ.எம். புன்னியாமீன், உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 2003. (Katugastota: J.J. Printers, 122, Kurunegala Rd)
248 பக்கம், விலை: ரூபா 260., அளவு 21x14.5 சமீ.

க.பொ.த. (உ/த), பல்கலைக்கழக முதற்கலைத் தேர்வு, பல்கலைக் கழக பொதுக்கலைத்தேர்வு ஆகிய பரீட்சையை எழுதவுள்ள அரசறிவியல் மாணவர்களின் நலன் கருதி எழுதப்பட்ட நூல் இது. பாடரீதியான குறிப்புக்கள் வினா - விடை வடிவில் தொகுத்து எளியநடையில் எழுதப்பட்டிருப்பது இந்நூலின் சிறப்பம்சமாகும். இது சிந்தனை வட்டத்தின் 173வது வெளியீடாகும். (நூல்தேட்டம் தொகுதி 5)

### 15

**அரசறிவியல் கோட்பாடுகள்.** பீ.எம். புன்னியாமீன், உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 1992. (அக்குறணை: நிலான் பிரின்டர்ஸ்,





364, மாத்தளை வீதி).
120 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ.

க.பொ.த உயர்தர அரசறிவியல் மூலதத்துவங்கள் பாடம் பகுதி 1 இல் இடம்பெறக்கூடிய அரசியல் கோட்பாடுகள் பற்றிய குறிப்புகள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்கள் சுயமாகக் கற்கக் கூடிய இலகு நடையில் இக்குறிப்புகள் காணப்படுகின்றன. இப்புத்தகத்தில் காணப்படக் கூடிய குறிப்புகள் பேராதனைப் பல்கலைக்கழக முதற் கலைத் தேர்வு மாணவர்களுக்கும் ஏற்ற வகையில் உள்ளன. இந்நூல் சிந்தனைவட்டத்தின் 23வது வெளியீடாக வெளிவந்துள்ளது. (நூல்தேட்டம் தொகுதி 5)










### 16

**அரசறிவியல் பகுதி 1: கோட்பாடுகளும் எண்ணக் கருக்களும்.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 7வது பதிப்பு, பெப்ரவரி 1997, 1வது பதிப்பு, ஜனவரி 1992. (கொழும்பு 13: விஜய கிரபிக்ஸ், 176/12, ஜம்பட்டா வீதி).
84 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 21x14 சமீ.

G.A.Q, G.C.E.(A/L) புதிய பாடத்திட்டத்துக்கான பாடநூல் தொடரில் 1வது நூல். அரசறிவியல் கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும தொடர்பான மாதிரி வினாக்களையும் சுருக்க விடைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கியது. அரசாங்க வினாப்பத்திரங்களிலும், பல்கலைக் கழக வினாப்பத்திரங்களிலும் இடம்பெறக் கூடிய வினாக்களை பிரதான 20 தலைப்புகளில் தொகுத்து 63 உப தலைப்புகளின் கீழ் விடை விளக்கமளிக்கப்பட்டுள்ளது. **(நூல்தேட்டம் பதிவிலக்கம் 2182)**

## 17

**அரசறிவியல் பகுதி 2: இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சி.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 7ஆவது பதிப்பு, ஜனவரி 1998, 1ஆவது பதிப்பு, மே 1993. (கொழும்பு 13: விஜய கிரபிக்ஸ், 176/12, ஜம்பட்டா வீதி).
72 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21x14 சமீ.

இந்நூல் புன்னியாமீன் மூலமாக எழுதி வெளியிடப்பட்ட G.A.Q, G.C.E. (A/L) புதிய பாடத்திட்டத்துக்கான பாடநூல்தொடரில் 3ஆவது நூல். இலங்கையில் அரசியல் திட்ட வளர்ச்சி தொடர்பான மாதிரி வினாக்களையும் சுருக்க விடைகளையும் உள்ளடக்கியது. அரசாங்க வினாப்பத்திரங்களிலும், பல்கலைக்கழக வினாப்பத்திரங்களிலும் இடம்பெறக் கூடிய வினாக்களை பிரதான 17 தலைப்புகளில் தொகுத்து 54 உப தலைப்புகளின் கீழ் விடை விளக்கமளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக 1931ம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பு முதல் 1978ம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு வரையிலான முக்கிய அம்சங்கள் ஆராயப்பட்டுள்ளமையினால் அரசறிவியலைத் தெரிந்து கொள்ள ஆர்வமுள்ளோருக்கும் இந்நூல் பொருத்தமானதாக அமையு மெனக் கருதலாம். **(நூல்தேட்டம் பதிவிலக்கம் 2183)**

## 18

**அரசறிவியல் பகுதி 3: உள்ளூராட்சிமுறை, கட்சிமுறை, வெளிநாட்டுக் கொள்கை.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 6ஆவது பதிப்பு, பெப்ரவரி 1997, 1ஆவது பதிப்பு, ஜனவரி 1991. (கொழும்பு 12: ஐக்கோ





லிமிட்டெட், 218/5, மெசெஞ்சர் வீதி).
64 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21x14 சமீ.

புன்னியாமீன் மூலம் எழுதி வெளியிடப்பட்ட G.A.Q, G.C.E.(A/L) புதிய பாடத்திட்டத்துக்கான பாடநூல்தொடரில் 4ஆவது நூல். உள்ளூராட்சி முறையும், கட்சி முறையும், வெளிநாட்டுக் கொள்கைகளும் சம்பந் தமான மாதிரி வினாக்களையும் சுருக்க விடைகளையும் உள்ளடக் கியது. உள்ளூராட்சி முறை, மாகாணசபை, கட்சிமுறை, ஐக்கிய நாடுகள் சபை, சார்க் அமைப்பு, அணிசேரா இயக்கம் ஆகிய அம்சங்கள் விளக்கப்படுத்தப்பட்டுள்ளன. **(நூல்தேட்டம் பதிவி லக்கம் 2184)**








## 19

**அரசறிவியல்: முதற்கலைத் தேர்வு.** பீ.எம்.புன்னியாமீன். கண்டி: E.P.I.கல்வி நிலையம், 83, கட்டுகஸ்தோட்டை வீதி, 1ஆவது பதிப்பு, ஜனவரி 1999. (Katugastota: Golden Trade Centre and Communication, 125, Madawala Road)
126 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x13.5 சமீ.

GAQ முதற்கலைத் தேர்வு வெளிவாரி மாணவர்களுக்கு ஏற்ற 1985-1998 காலப்பகுதிக்குரிய பரீட்சை வினாக்களைக் கொண்ட பாட அலகுரீதியான தொகுப்பு. வினாக்களுக்கான விடைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்க அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு மட்டுமன்றி அரசறிவியலின் அடிப்படைகளை அறிந்துகொள்ளவிரும்பும் எவருக்கும் ஏற்றது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2185)

## 20

**அரசறிவியல் மூலதத்துவங்கள் (பகுதி 01).** பீ.எம். புன்னியாமீன். கண்டி: EPI Tutorial College, 115, D.S. Senanayaka Rd, 1ஆவது பதிப்பு, ஆகஸ்ட் 1990. (அக்குறணை: நிலான் பிரின்டர்ஸ், 364 மாத்தளை வீதி).
96 பக்கம், விலை: ரூபா 80., அளவு 20.5x14 cm

க.பொ.த உயர்தர அரசறிவியல் மூலதத்துவங்கள் பாடத்தில் பகுதி 01 பாடப்பரப்பைத் தழுவியதான குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்கள் சுயமாகக் கற்கக் கூடிய இலகு நடையில் இக்குறிப்புகள் காணப்படுகின்றன. அத்துடன் பகுதி 01 இல் இடம்பெறக்கூடிய பரீட்சை மாதிரி வினாப்பத்திரம் விடைகளுடன் விளக்கப்பட்டுள்ளது. (நூல்தேட்டம் தொகுதி 5)

## 21

**அரசறிவியல் மூலதத்துவங்கள் (பகுதி 02).** பீ.எம். புன்னியாமீன். கண்டி: EPI Tutorial College, 115, D.S. Senanayaka Rd, 1ஆவது பதிப்பு, செப்டெம்பர் 1990. (அக்குறணை: நிலான் பிரின்டர்ஸ், 364 மாத்தளை வீதி).
96 பக்கம், விலை: ரூபா 80., அளவு 20.5x14 சமீ.

க.பொ.த உயர்தர அரசறிவியல் மூலதத்துவங்கள் பாடத்தில் பகுதி 02 பாடப்பரப்பைத் தழுவியதாக குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்கள் சுயமாகக் கற்கக் கூடிய இலகு நடையில் இக்குறிப்புகள் காணப்படுகின்றன. அத்துடன் பகுதி 02 இல் இடம்பெறக்கூடிய பரீட்சை மாதிரி வினாப்பத்திரம் விடைகளுடன் விளக்கப்பட்டுள்ளது. (நூல்தேட்டம் தொகுதி 5)










## 22

**அரசறிவியல் மூலதத்துவங்கள்: பரீட்சை மாதிரி வினா விடை 1998.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 1998. (கட்டுகஸ்தொட்டை: J.J.Printers, 122, Kurunegala Road).
88 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 28x21.5 சமீ.

1997ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான அரசறிவியல் மூலதத்துவங்கள் பாடப்பரப்பில் இடம்பெறும் வினாக்களுக்கு விடை எழுதக்கூடிய வகையில் பரீட்சை மாதிரி வினாவிடை 1998 என்னும் இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூலில் புதிய பாடத்திட்டத்திற்கமைய பகுதி 1, 2 ஆகிய இரு வினாப் பத்திரங்களிலும் வினாக்கள் எவ்வாறு அமையும், விடைகள் எவ்வாறு வழங்க வேண்டும் என்பன போன்ற விளக்கங்கள் எளிய நடையில் இதன் நூலாசிரியர் புன்னியாமீன் மூலம் வழங்கப்பட்டுள்ளன. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 3184)

## 23

**அரசறிவியல் மூலதத்துவங்கள்: பல்தேர்வு மாதிரி வினா விடைத் தொகுதி 1.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1ஆவது பதிப்பு, நவம்பர் 1997. (கொழும்பு 12: Aico Ltd, 218/5, Messenger Street).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 28x21.5 சமீ.

1997ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான அரசறிவியல் மூலதத்துவங்கள் பாடப்பரப்பில் முதற்தடவையாக பல்தேர்வு வினாக்கள் (MCQ) வினாப்பத்திரம் அறிமுகப்படுத்தப் பட்டது. பரீட்சையில் 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இவ் வினாப் பத்திரத்திற்கேற்ற வகையில் முழுமையான பாடப்பரப்பினை உள்ளடக்கி மாணவர்களின் நுணுக்க அவதானிப்பு, ஞாபகத்திறன் என்பவற்றை அளவிடக்கூடிய வகையில் இந்நூல் தயாரிக்கப் பட்டுள்ளது. இந்நூலில் மொத்தம் 10 மாதிரி வினாத்தாள்கள் இணைக் கப்பட்டுள்ளன. அரசறிவியல் மாணவர்களுக்கென இலங்கையிலே தமிழ்மொழி மூலம்வெளிவந்த முதலாவது பல்தேர்வு வினாவிடைத் தொகுதி இதுவென்று கருதப்படுகின்றது. இந்நூல் சிந்தனைவட்டத்தின் 72வது வெளியீடாகும். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 3185)

## 24

**1994 சனாதிபதித் தேர்தலும் சிறுபான்மை இனங்களும்.** பீ.எம்.புன்னியாமீன். கொழும்பு 13: E.P.I.புத்தகாலயம், 64, 2/2, Hinni Appuhamy Mawathe, 2வது பதிப்பு, ஜனவரி 1995, 1வது பதிப்பு, நவம்பர் 1994. (கொழும்பு 10: Jeevathas, A225/33, Maligawathe Flats).
92 பக்கம், அட்டவணைகள், சித்திரங்கள், விலை: ரூபா 70., அளவு: 21x14 சமீ.




அரசறிவியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கும், அரசியலைத் தெரிந்து கொள்ள ஆர்வமுள்ள அனைவருக்கும் ஏற்ற நூல். இலங்கையில் நடைபெற்று முடிந்த முதல் மூன்று ஜனாதிபதி தேர்தல்களினதும் வாக்கு விபரம் மாகாண, மாவட்ட, தொகுதி அடிப்படையில் தரப்பட்டுள்ளன. 1994ம் ஆண்டு சனாதிபதித் தேர்தலில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க வெற்றியீட்டுவதற்கு சிறுபான்மை சமூகத்தினரின் வாக்குகள் விசாலமான பங்களிப்பினை வழங்கியது. எனவே, சிறுபான்மை இனத்தவர்களின் அடிப்படைப் பிரச்சினைகளை சனாதிபதி எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்று ஆராயப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2187)





## 25

**1994 பொதுத் தேர்தலும் சிறுபான்மை இனங்களும்.** பீ.எம்.புன்னியாமீன். கொழும்பு 13: E.P.I. புத்தகாலயம், 64, 2/2, Hinni Appuhamy Mawathe, 2வது பதிப்பு, ஜனவரி 1995, 1வது பதிப்பு, நவம்பர் 1994. (கொழும்பு 10: Jeevathas, A225/33, Maligawathe Flats).
84 பக்கம், அட்டவணைகள், சித்திரங்கள், விலை: ரூபா 55., அளவு: 21.5x14 சமீ.




இலங்கை அரசியலில் 10வது பொதுத்தேர்தல் நடந்து முடிந்துவிட்ட நிலையில் அது ஏற்படுத்தக் கூடிய சமகால அரசியல் மாற்றங்களை எதிர்வுகூறும் அரசியல் திறனாய்வுகள். பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் விளக்கமாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக 10வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் அரசாங்கத்தை அமைக்கக் கூடிய அதிகாரத்தினை சிறுபான்மை மக்கள் பிரதிநிதிகள் மூலமாகவே வழங்கப்பட்டது. எனவே, 1994ம் ஆண்டு பதவியேற்ற அரசாங்கம் வடக்கு, கிழக்கு பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளமை சிறப்பம்சமாகும். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2188)

## 26

**21ம் நூற்றாண்டின் இலங்கையின் தலைமைத்துவம்:** 1999 ஜனாதிபதித் தேர்தல் ஒரு மதிப்பீடு. பீ.எம்.புன்னியாமீன்.உடத்தல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின்னை 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஜனவரி 2000. (கட்டுகஸ்தொட்ட: ஜே.ஜே.பிரின்டர்ஸ், 122, கலகெதர வீதி).
128 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 120., அளவு: 21.5x14 செ.மீ.







1999 டிசம்பர் 21ம் திகதி இலங்கையில் நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தலைப் பின்னணியாகக் கொண்டு வெளியிடப்பட்ட அரசறிவியல் ஆய்வுநூல். 21ம் நூற்றாண்டின் இலங்கையின் ஆரம்ப தலைமைத்துவத்தை 4வது சனாதிபதித் தேர்தலினூடாக மக்கள் தெரிவு செய்துவிட்டாலும் புத்தாயிரத்தின் தலைவாசலில் தடம்பதித்துள்ள இனவாதப் பிரச்சினைகள், பயங்கரவாதப் பிரச்சினைகள், வேலையில்லாப் பிரச்சினைகள், பொருளாதார, அரசியல் பிரச்சினைகளை தலைமைத்துவம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது என்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது. மேலும், இலங்கையில் நடைபெற்ற நான்கு சனாதிபதித் தேர்தல் முடிவுகளையும் ஒரே பார்வையில் அவதானிக்கக் கூடியதாக இருப்பது சிறப்பம்சமாகும். இது சிந்தனை வட்டத்தின் 95வது வெளியீடாகும். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2194)





**27**

**2000 பாராளுமன்றப் பொதுத்தேர்தலும் சிறுபான்மைச் சமூகத்தினரும்.** பீ.எம். புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 2000. (கட்டுகஸ்தொட்ட: C.G.M. Express Print Shop, 127, மடவளை வீதி)
162 பக்கம், அட்டவணைகள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 120., அளவு: 17x12.5 சமீ.

11வது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அமைந்த அரசியல் ஆய்வு. அரசியல் கற்கையில் ஆர்வமுள்ளவர்களுக்கும், B.A., G.A.Q., G.C.E.(A/L) அரசறிவியல் மாணவர்களுக்கும் ஏற்புடையது. சிந்தனை வட்டத்தின் 114வது வெளியீடு. பத்தாவது பாராளுமன்ற பொதுத் தேர்தலில் அரசாங்கத்தை அமைக்க சிறுபான்மை கட்சிகள் உறுதுணையாக நின்றன. அதேபோல பதினோராவது பாராளுமன்றத்தேர்தல் முடிவுகளும் சிறுபான்மைக் கட்சிகளின் முக்கியத்துவத்தை உணர்த்தக் கூடிய வகையில் அமைந்திருந்தன. ஆனால், இலங்கையில் சிறுபான்மைப் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இந்நிலையில் சிறுபான்மை சமூகத்தினரின் பிரச்சினைகளும், குறிப்பாக வடக்கு கிழக்கு சிறுபான்மையினத்தவர்களின் பிரச்சினைகளும் எவ்வாறு எதிர்நோக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2190)

**28**




**இலங்கையில் தேர்தல்கள்: அன்றும் இன்றும்.** பீ.எம்.புன்னியாமீன். கொழும்பு 13: ஈ.பீ.ஐ.புத்தகாலயம், 64,2/2, ஹின்னி அப்புஹாமி மாவத்தை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1994. (கொழும்பு 10: ஜீவாதாஸ், ஏ 225/33, மாளிகாவத்தை தொடர்மாடி).
68 பக்கம், வரைபடங்கள், புள்ளிவிபரம், விலை: ரூபா 50., அளவு: 21x13.5 சமீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசியல் வரலாற்றில் சட்டநிருபண சபைக்கு பிரதிநிதி யொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான முதலாவது தேர்தல் 1911ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் திகதி நடைபெற்றது. இத்தேர்தலில் இருந்து 1994ம் ஆண்டில் தென் மாகாணசபை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட இடைக்கால மாகாணசபைத் தேர்தல் வரை இலங்கையில் நடைபெற்ற சகல தேர்தல்களும், அவற்றின் போக்குகளும், தேர்தல் முடிவுகளும் இந்நூலில் ஆராயப்பட் டுள்ளன. புன்னியாமீனால் எழுதப்பட்டு சிந்தனை வட்டத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் இலங்கையின் தேர்தல் வரலாற்றினைச் சுருக்கமாகத் தெரிந்துகொள்ள ஆர்வமுள்ள அனைவருக்கும் பயன்மிக்க கையேடாகும். **(நூல்தேட்டம் பதிவிலக்கம் 3193)**

**29**

**இலங்கையின் அரசியல் 95: நிகழ்கால நிகழ்வுகள்.** பீ.எம்.புன்னியாமீன், உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே,
1வது பதிப்பு, மே 1995. (கொழும்பு 10: M.B.Printers, L/G/S/04 Sri Sangaraja Mawathe)
80 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21x13.5 சமீ.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் "தேசியக் கொள்கை" என்ற எண்ணக்கரு இன்றியமையாதது. தேசத்தின் பொருளாதாரம், கல்வி, சமூகவியல், ஆகிய துறைகளில் தேசியக் கொள்கைகள் காணப்படின் அரசாங்க மாற்றங்களால் இவ்வடிப்படைக் கொள்கைகள் மாறப்போவதில்லை. இதனால் நாட்டின் சீரான அபிவிருத்தியினை நாம் அவதானிக்கமுடியும். மாறாக, அரசாங்கம் மாற, மாற குறித்த துறைசார்ந்த கொள்கைக ளைத் தேசியக் கொள்கைகளாகவன்றி கட்சிக் கொள்கைகளாக மாற்றிவருவது பலவி தமான சிக்கல்களை நாட்டில் உருவாக்கலாம். இத்தன்மைகளைப் பொதுவாக மூன்றாம்








வின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே,








1வது பதிப்பு, ஏப்ரல் 1997. (Colombo 12: Aico (Pvt) Ltd, 218/5 Messenger Street)
iv, 98 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 28x21.5 சமீ.

இலங்கையில் மாணவர்கள் எதிர்நோக்கும் முதலாவது அரசாங்கப் பரீட்சை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையாகும். மாணவர்களை பிரபல்யமான பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்க ளுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5ல் நடத்தப்படும் இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாகும். புலமைப்பரிசில் பரீட்சைக் குத் தோற்றும் மாணவர்களுக்கான இந்நூலில் பகுதி 1, பகுதி 2க் கான 24 மாதிரி வினாப்பத்திரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இந்நூல் சிந்தனைவட்டத்தின் 66வது வெளியீடாகும். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 3002)

**36**

**ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினா-விடைகள்: தொகுதி 2.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தல வின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. (Colombo 12: Aico (Pvt) Ltd, 218/5 Messenger Street)
113 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 28x21.5 சமீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை வழி காட்டி நூல். இவ்விரண்டாம் தொகுதியில் மாதிரி வினாப்பத்திரங்கள் 25 முதல் 44 வரை இடம்பெற்றுள்ளன. அரசாங்கப் பரீட்சையில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், அப்பிரச்சினைகளுக்கான தீர்வினை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் போன்ற விளக்கங்களும் தரப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும் இப்புத்தகம் சிந்தனைவட்டத்தின் 67 வெளியீடாகும். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 3003)

## 37

**2002 புலமைப்பரிசில் புலமை ஒளி.** பீ..எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, அக்டோபர் 2001. (Katugastota: J.J. Printers, 122, Kurunegala Rd)
200 பக்கம், படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 190., அளவு 28x21.5 சமீ.

இந்நூல் சிந்தனைவட்டத்தின் 124வது வெளியீடாகும். 2002ம் ஆண்டிலும், அதற்குப் பின்பும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன்கருதி இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. நுணுக்கமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள 32 மாதிரி வினாப்பத்திரங்களுள் பகுதி 01 இல் 16 வினாப்பத்திரங்களும், பகுதி 02 இல் 16 வினாப்பத்திரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. போட்டிப் பரீட்சையொன்றில் புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் பத்து வயது மாணவர்கள் எவ்வாறு பரீட்சையை எழுத வேண்டும் என்ற விளக்கம் சேர்க்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். (நூல்தேட்டம் தொகுதி 5)

## 38

**2003 புலமைப் பரிசில் மாதிரி வினா விடை.** பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 2ம் பதிப்பு, பெப்ரவரி





2003, 1வது பதிப்பு, ஜனவரி 2003. (Colombo 12 : Print Com (Pvt) Ltd., 134 Hulfsdrop Street)
152 பக்கம், படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 210., அளவு 28x21.5 சமீ.

இந்நூல் சிந்தனைவட்டத்தின் 153வது வெளியீடாக முதலாம் பதிப்பும், 159வது வெளியீடாக 2வது பதிப்பும் வெளிவந்துள்ளது. புதிய பாடத்திட்டத்தின் கீழ் 2003ம் ஆண்டிலும், அதற்குப் பின்பும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கற்றலை இலகுவாக்கும் முறையில் வழிகாட்டி நூலாக இந்நூல் வெளிவந்துள்ளது. 24 மாதிரி வினாப்பத்திரங்கள் (பகுதி 1இல் 12 வினாப்பத்திரங்களும், பகுதி 2ல் 12 வினாப்பத்திரங்களும்) சேர்க்கப்பட்டுள்ளன. 2002 ஆகஸ்ட் 10ம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 150 மதிப்பெண்களுக்கு மேல் பெற்று சித்தியடைந்த 91 மாணவமணிகளின் பெயரப்பட்டியலின் முதல் தொகுதி இந்நூலில் பிரிசுரிக்கப்பட்டுள்ளது. (நூல்தேட்டம் தொகுதி 5)








## 39

**2004 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி: தொகுதி 1.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, பங்குனி 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 110., அளவு: 27.5x20.5 சமீ.
ISBN: 955-8913-09-X

சிந்தனை வட்டத்தின் 182வது வெளியீடு. 2004ம் ஆண்டில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாணவர் வழிகாட்டி. வினாக்களும் விடைகளும் கொண்டது. இலங்கையில் நடைபெறக் கூடிய போட்டிப் பரீட்சைகளில் மாணவர்கள் எதிர்கொள்ளும் முதலாவது போட்டிப் பரீட்சை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையாகும். இப்பரீட்சையானது பகுதி 1, பகுதி 2 ஆகிய இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டது. மாணவர்களின் திறனை அளவிடுவது இப்பரீட்சையின் நோக்கம். இதனைக் கருத்திற் கொண்டு மாணவர்களின் திறன்களை படிப்படியாக அபிவிருத்தி செய்யும் நோக்கில் இவ்வினாப்பத்திரங்கள் அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். **(நூல்தேட்டம் பதிவிலக்கம் 2003)**

**40**

**2004 புலமைப் பரிசில் மாணவர் வழிகாட்டி: தொகுதி 2.** பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).
72 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 110., அளவு: 27.5x20.5 சமீ.
ISBN: 955-8913-10-3

சிந்தனை வட்டத்தின் 183வது வெளியீடு. 2004ம் ஆண்டில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாணவர் வழிகாட்டி. வினாக்களும் விடைகளும் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அரசாங்கப் பரீட்சையில் முதலாம் பகுதியில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், அப்பிரச்சினைகளுக்கான தீர்வினை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் போன்ற விளக்கங்களும் தரப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். **(நூல்தேட்டம் பதிவிலக்கம் 2004)**

**41**

**2004 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி: தொகுதி 3.**





உலக நாடுகளில் காணமுடியும். 1994ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல்களில் பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியது. இதனைத் தொடர்ந்து 1995ம் ஆண்டில் இலங்கையில் பொருளாதார, கல்வி, சமூகவியல், வெளிநாட்டுக் கொள்கைகளில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றங்கள் இந்நூலில் சித்திரிக்கப்பட்டுள்ளன. காலத்தின் தேவையுணர்ந்து எழுதப்பட்ட நூல் இதுவாகும். G.C.E.(A/L), G.A.Q., B.A. வகுப்புகளுக்கேற்றது. **(நூல்தேட்டம் பதிவிலக்கம் 2197)**

**30**

**சிறுபான்மைப் பிரதிநிதித்துவ விகிதாசாரம் பேணும் 12வது பாராளுமன்றம் இனப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்குமா?** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஜனவரி 2002. (கட்டுகஸ்தொட்ட: ஜே.ஜே.பிரின்டர்ஸ், 122, குருநாகலை வீதி).
108 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: ரூபா 120., அளவு: 20x14.5 சமீ.

2001ம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அமைந்த அரசியல் ஆய்வு. தேர்தல் முடிவுகள் விபரமாக அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன. அரசியலை அறிந்துகொள்ள விரும்புவோருக்கும், B.A., G.A.Q., G.C.E.(A/L) அரசறிவியல் மாணவர்களுக்கும் இந்நூல் ஏற்புடையது. சிறுபான்மை பிரதிநிதித்துவ விகிதாசாரம் பேணும் 12வது பாராளுமன்றம் கொதிநிலையில் நிற்கும் இனப்பிரச்சினைக்கு விடிவுகாணுமா என்ற பிரதான கேள்விக்கு இந்நூலாசிரியர் பதில் சொல்ல முனைகிறார். குறிப்பாக இலங்கை அரசியல் வரலாற்றின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒரு கட்சியையும், பிரதம மந்திரி மற்றுமொரு கட்சியையும் சேர்ந்த நிலை 12வது பாராளுமன்றத் தேர்தலில் நிகழ்ந்தது. இத்தகைய நிலையின் அரசியல் முன்னெடுப்புக்கள் பற்றியும் இந்நூல் குறிப்பிடுகின்றது. **(நூல்தேட்டம் பதிவிலக்கம் 2205)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**31**

**தெரிவுசெய்யப்பட்ட நாடுகள்.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 6வது பதிப்பு, ஒக்டோபர் 1997, 1வது பதிப்பு, ஜுன் 1993. (கொழும்பு 13: டிஜிட்டல் பிரின்ட், 601/61, K.Ciril C Perera Mawathe).
88 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: ரூபா 80., அளவு: 21x14 சமீ.

G.C.E.(A/L), G.A.Q., வகுப்புகளுக்கேற்றது. மாதிரி வினாக்களையும், சுருக்க விடைகளையும் உள்ளடக்கியது. G.C.E.(A/L), G.A.Q., மட்டத்தினருக்கான பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளையும், G.C.E.(A/L) மாணவர்களுக்கான இந்தியா, முன்னைய சோவியத் யூனியன் ஆகிய பாட அலகுகளையும் உள்ளடக்கியுள்ளது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2209)

**32**

**பிரித்தானியாவின் அரசியல் முறை.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 7வது பதிப்பு, பெப்ரவரி 1997, 1வது பதிப்பு, ஜனவரி 1988.














(கொழும்பு 04: வி.கிருஷ்ணமூர்த்தி, 316, காலி வீதி,).
48 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ.

உடத்தலவின்னை மடிகே சிந்தனைவட்டம் வெளியிட்ட முதலாவது நூல் 'பிரித்தானியாவின் அரசியல் முறை' எனும் நூலாகும். G.A.Q, G.C.E.(A/L) புதிய பாடத்திட்டத்துக்கான பாடநூல். மாதிரி வினாக்களையும் சுருக்க விடைகளையும் உள்ளடக்கியது. பிரித்தானியாவின் அரசியலமைப்பு ஒரு வரையப்படாத யாப்பாகும். எழுத்துருப் பெறாத சட்டங்களாக விளங்கும் மரபுகளும், வழக்காறுகளும் பிரித்தானியா அரசாங்க முறையினை வழிநடத்திச் செல்லும் விதமும், பிரித்தானியப் பாராளுமன்றம், பிரபுக்கள் சபை, உள்ளூராட்சி முறை, கட்சி முறை என்பன எளிய நடையில் விளக்கப்பட்டுள்ளது. பிரித்தானிய அரசியல் அமைப்புக்களைப் பற்றி தெரிந்து கொள்ள ஆர்வமுள்ளோருக்கும் இந்நூல் பொருந்தும். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2213)

**33**

**B.A.அரசறிவியல்: பாடநூல்.** பீ.எம்.புன்னியாமீன். கண்டி: E.P.I, கல்வி நிலையம், 83, கட்டுகஸ்தோட்டை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1999. (Kandy: MECK Computer Lab., 127/2/2 Kotugodella Veediya).
126 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21x13.5 சமீ.

பேராதனைப் பல்கலைக்கழக பொதுக் கலைமாணி (B.A.) வெளிவாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் நலன்கருதி, அரசறிவியல் பாடத்துக்காக வெளியிடப் பட்ட நூல். 1990ம் ஆண்டு முதல் 1998ம் ஆண்டு வரை இடம்பெற்ற பரீட்சை வினாக்கள், பாட அலகு ரீதியாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவ் வினாக்களுக்கான விடைகளும் சுருக்கக் குறிப்புகளாக வழங்கப் பட்டுள்ளன. அரசறிவியல் சமூகக் கோட்பாடுகள், இலங்கை அரசாங் கம், பொதுத்துறை ஆட்சியியல், ஆகிய தலைப்புகளில் விடயங்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2212)

### 34

**மத்திய மாகாண சபையில் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி வந்த அமைச்சரவைப் பதவிக்கு சாவுமணி: உரிமை பறிக்கப்பட்ட பின்பும் ஏன் இன்னும் மௌனம்?** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்ன: மத்திய இலங்கை பட்டதாரிகள் ஒன்றியம், இல.14, உடத்தலவின்ன, 1வது பதிப்பு, ஜுன் 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை)

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

மத்திய மாகாணத்தில் சுமார் இரண்டரை இலட்சம் முஸ்லிம்கள் வாக்காளர்களாக இருக்கின்றனர். இவர்களுள் 80சத வீதத்தினர் ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவாளர்கள். இருப்பினும் மாகாண சபையில் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப் படுத்திவந்த அமைச் சரவைப் பதவியை ஐக்கிய தேசிய முன்னணி பறித்துள்ளது. இந்நிலை யில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கற்றறிந்து கொள்ள ஏதுவாக இப்பிரச்சினையின் போக்கினையும், தன்மையினையும் ஆவ ணப்படுத்தும் வகையில் உருவான கையேடு. தேசியப் பத்திரிகைகள், ஊடகங்களில் வெளியான அறிக்கைகள், செய்திகளின் தொகுப்பு. (நூல்தேட்டம் பதிவிலக்கம்2217)

## 370 புலமைப்பரிசில் பரீட்சைக் கைநூல்கள்

### 35

**ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினா-விடைகள்: தொகுதி 1.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தல











### 47

**2006 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 1).** பீ..எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனைவட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1ம் பதிப்பு, பெப்ரவரி 2006. (Katugastota: J.J. Printers, 122, Kurunegala Rd).

58 பக்கம், படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 110., அளவு 27x21.5 சமீ., ISBN : 955-8913-31-6.

இந்நூல் சிந்தனைவட்டத்தின் 216வது வெளியீடாகும். தரம் 5 புலமைப் பரிசில் அரசாங்க பரீட்சையை முன்னிட்டு புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன் ஆகியோரால் எழுதப்பட்ட இந்நூலில் கணிதப் பாடப் பரப்பில் இடம்பெறக்கூடிய ஆரம்ப விளக்கக்குறிப்புகளும் ஆறு மாதிரி வினாத்தாள்களும் இடம்பெற்றுள்ளன. மாணவர்களின் கற்றலை இலகுபடுத்தும் வகையில் எளிமையான நடையில் இந்நூல் எழுதப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (நூல்தேட்டம் தொகுதி 5)

### 48

**2006 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 2).** பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை 20802:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைவட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 2006. (Katugastota: J.J. Printers, 122, Kurunegala Rd).
80 பக்கம், படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 110., அளவு 21x14..5 சமீ. ISBN : 955-8913-32-4

இந்நூல் சிந்தனைவட்டத்தின் 217வது வெளியீடாகும். தரம் 5 புலமைப் பரிசில் அரசாங்கப் பரீட்சையை முன்னிட்டு புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன் ஆகியோரால் எழுதப்பட்ட இந்நூலில் ஆரம்ப ஆங்கிலம் பற்றிய சுருக்கக் குறிப்புகளும், நான்கு மாதிரி வினாத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளன. வழமையான புத்தக வடிவமைப்புக்கு மாறாக இடமிருந்து வலமாகப் புத்தகத்தைப் பார்க்கக்கூடிய வகையில் இப்புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். (நூல் தேட்டம் தொகுதி 5)

## 49

**2006 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 3).**
பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, மே 2006. (Katugastota, J.J. Printers, 122, Kurunegala Rd).
96 பக்கம், படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 110 அளவு 27x21.5 சமீ., ISBN : 955-8913-33-2.







இந்நூல் சிந்தனைவட்டத்தின் 219வது வெளியீடாகும். தரம் 5 புலமைப் பரிசில் அரசாங்க பரீட்சையை முன்னிட்டு புன்னியாமீன், மஸீதா





புன்னியாமீன் ஆகியோரால் எழுதப்பட்ட இந்நூலில் மாதிரிவினாத்தாள்களுடன், கணிதப் பாடப்பரப்பின் பின்னைய பகுதிகள் சுருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் சுயமாக விளங்கக் கூடிய வகையில் எளிய நடையில் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. (நூல்தேட்டம் தொகுதி 5)

## 50

**2006 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 4).**
பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனைவட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, மே 2006. (Katugastota, J.J. Printers, 122, Kurunegala Rd).
96 பக்கம், படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 110., அளவு 27x21.5 சமீ. ISBN : 955-8913-34-0.

இந்நூல் சிந்தனைவட்டத்தின் 220வது வெளியீடாகும். தரம் 5 புலமைப்பரிசில் அரசாங்க பரீட்சையை முன்னிட்டு புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன் ஆகியோரால் எழுதப்பட்ட இந் நூலில் மாதிரி வினாத்தாள்களுடன், ஆங்கிலப் பாடப்பரப்பின் பின்னைய பகுதிகள் படங்களுடன் சுருக்கக் குறிப்புகளாகத் தரப்பட்டுள்ளன. பரீட்சை பற்றிய பயத்தினை மாணவர்கள் மனதிலிருந்து நீக்குவதை குறிக்கோ






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாகக் கொண்டு இப்புத்தகத்தில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி வினாத்தாள்கள் அமைந்துள்ளன. (நூல்தேட்டம் தொகுதி 5)







**51**

**2007 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 1).**
பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 2006, (உடத்தலவின்னை 20802: சிந்தனைவட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்னை மடிகே) .
64 பக்கம், படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 97., அளவு 21x14 சமீ.ISBN : 955-8913-42-1

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையானது, சித்தியடையும் மாணவர்களுக்கு உபகாரப்பணம் மாதந்தோறும் வழங்கப்படுவதினாலும் நகர்புறங்களிலுள்ள பிரபல பாடசாலைகளுக்கு அனுமதி வழங்கப்படுவதினாலும் இலங்கையில் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. 2007ம் ஆண்டு இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக எழுதப்பட்டதே மேற்படி நூலாகும். இது சிந்தனைவட்டத்தின் 237வது வெளியீடாகும். அதேபோல நூலாசிரியை மஸீதா புன்னியாமீன் எழுதி வெளியிடும் 50வது நூலுமாகும். (நூல்தேட்டம் தொகுதி 5)





பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, மே 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).
64 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 110., அளவு: 27.5x20.5 சமீ., ISBN: 955-8913-11-1

சிந்தனை வட்டத்தின் 185வது வெளியீடு. 2004ம் ஆண்டில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாணவர் வழிகாட்டி. வினாக்களும் விடைகளும் கொண்டது. அரசாங்கப் பரீட்சையில் பகுதி 2 இல் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், அப்பிரச்சினைகளுக்கான தீர்வினை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் போன்ற விளக்கங்களும் தரப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். (நூல்தேட்டம் பதிவிலக்கம்2005)







**42**

**2004 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி: தொகுதி 4.**
பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, மே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).
64 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 110., அளவு: 27.5x20.5 சமீ., ISBN: 955-8913-12-X

சிந்தனை வட்டத்தின் 187வது வெளியீடு. 2004ம் ஆண்டில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாணவர் வழிகாட்டி. வினாக்களும் விடைகளும் உள்ளடங்கியுள்ளன. அரசாங்கப் பரீட்சையில் வசன அடிப்படையில் எழுத வேண்டிய கட்டுரையின் போது மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், அப்பிரச்சினைகளுக்கான தீர்வினை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் போன்ற விளக்கங்களும் தரப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2006)

## 43

**2005 புலமைப் பரிசில் மாணவர் வழிகாட்டி: தொகுதி 1.**
பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 2005. (Kandy: Creative Printers & Designers, 03/A Bahiravakanda Road).
64 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 30x21 சமீ., ISBN: 955-8913-39-1.

சிந்தனை வட்டத்தின் 198வது பிரசுரமாக வெளிவந்துள்ள இந்நூல் 2005ம் ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக வெளியிடப்பட்டதாகும். மாணவர்களுக்கு எழக்கூடிய கணிதம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தெளிவான விளக்கத்தை இவ்வழிகாட்டி நூல் வழங்குகின்றது. புலமைப்பரிசில் பரீட்சையில் கணிதம் ஒரு தனி வினாத்தாளாக இடம்பெறாவிடினும் கூட பகுதி I இல் தர்க்க ரீதியான, புலமை ரீதியான கணித அறிவு அளவிடப்படும். அதற்கேற்ற வகையில் குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. (நூல் தேட்டம் பதிவிலக்கம் 2007)











## 44

**2005 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி: தொகுதி 2.**
பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 2005. (Kandy: Creative Printers & Designers, 03/A Bahiravakanda Road).
64 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 30x21 சமீ., ISBN: 955-8913-40-5

சிந்தனை வட்டத்தின் 199வது பிரசுரமாக வெளிவந்துள்ள இந்நூல் 2005ம் ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக வெளியிடப்பட்டதாகும். புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள் பத்து இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்களின் ஆக்கத்திறனை விருத்திசெய்யும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இப்புத்தகத்தில் இலங்கையின் தேசிய பறவையான காட்டுக்கோழி பற்றியும், தேசிய விளையாட்டான கரப்பந்தாட்டம் பற்றியும், தேசிய மலரான நீலோற்பலம் (நீலஅல்லி) பற்றியும், தேசிய மரமான நாகமரம் பற்றியும் குறிப்புகள் புகைப்படங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2008)

## 45

**2005 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி: தொகுதி 3.**
பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைவட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 2005. (Kandy: Creative Printers & Designers, 03/A Bahiravakanda Road).
64 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 30x21 சமீ., ISBN: 955-8913-22-7.

சிந்தனை வட்டத்தின் 201வது பிரசுரமாக வெளிவந்துள்ள இந்நூல் 2005ம் ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவரக ளுக்காக வெளியிடப்பட்டதாகும். பாடரீதியான எவ்வளவு விளக்கங்களை மாணவர்கள் பெற்றாலும்கூட பரீட்சையொன்றில் அதிக புள்ளிகள் பெற்று சித்தியெய்த பயிற்சி அவசியமானது. பரீட்சை பற்றிய பயத்தினை மாணவர்கள் மனதிலிருந்து களையும் முகமாக பத்து மாதிரி வினாத்தாள்களை (பகுதி1, பகுதி2) உள்ளடக்கியதாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. **(நூல்தேட்டம் பதிவிலக்கம் 2009)**

## 46

**2005 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி: தொகுதி 4.** பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 2005. (Kandy: Creative Printers & Designers, 03/A Bahiravakanda Road).
80 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 21x13.5 சமீ., ISBN: 955-8913-23-5.

2005 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி இறுதித் தொகுதியான (4வது தொகுதி) இத்தொகுதியில் பரீட்சையை மையப்படுத்திய சகல பாட அலகுகளும் இணைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மாணவர்களின் நுண்ணறிவை விருத்திசெய்யக்கூடிய வகையில் பயிற்சிகளும், குறிப்பு களும் சேர்க்கப்பட்டுள்ளன. இலங்கையிலேயே ஆகக்கூடுதலான தரம் 5 புலமைப்பரிசில் நூல்களை வெளியிட்டுவரும் சிந்தனை வட்டத்தின் 202வது வெளியீடு இது. **(நூல்தேட்டம் பதிவிலக்கம் 2010)**





## 52

**2007 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 2).** பீ..எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 2006. (உடத்தலவின்னை 20802: சிந்தனைவட்டம் அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்னை மடிகே) .
64 பக்கம், படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா. 97., அளவு 21x14 சமீ., ISBN : 955-8913-43-X

கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன் இணைந்து எழுதி வெளியிட்டுள்ள மற்றுமொரு புலமைப்பரிசில் நூல் இதுவாகும். தரம் 5 மாணவர்களின் பரீட்சையை மையமாக வைத்து எழுதப் பட்டுள்ள இந்நூலில் விலங்குகள் பற்றியும், தமிழ் இலக்கணங்கள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இது சிந்தனைவட்டத்தின் 235வது வெளியீடாகும். **(நூல்தேட்டம் தொகுதி 5)**

## 53

**தரம் 4 புலமை விருட்சம். பீ..எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன்.** உடத்தலவின்னை, 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (கண்டி: கிரியேடிவ் பதிப்பகம், 3A பஹிரவாகந்த வீதி).
56 பக்கம், படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 97.50, அளவு 27.5x21 சமீ., ISBN : 955-8913-27-8

சிந்தனைவட்டத்தின் 208வது வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூல புலமைப்பரிசில் பரீட்சையை எழுதவுள்ள மாணவர்களுக்காக வேண்டி தரம் 4 பாடப்பரப்பினை அடிப்படையாகக் கொண்ட மாதிரி வினாப்பத் திரங்களை உள்ளடக்கிய நூலாகும். தரம் 4ல் புலமைப்பரிசில் பரீட்சை இடம்பெறாவிடினும் கூட தரம் 5ல் இடம்பெறக் கூடிய புலமைப்பரிசில் பரீட்சையில் தரம் 4 பாட அலகுகளும் கணிசமாக இடம்பெறலாம். இதனைக் கருத்திற் கொண்டு இந்நூல் தயாரிக்கப் பட்டுள்ளது. **(நூல்தேட்டம் தொகுதி 5)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## 54

**தரம் 4 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1ஆவது பதிப்பு, ஒக்டோபர் 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை)

(2), 78 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 27x21 சமீ., ISBN: 955-8913-38-4

இது சிந்தனை வட்டத்தின் 195ஆவது வெளியீடு. 2005ம் ஆண்டில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான தரம் 04 க்குரிய மாணவர் வழிகாட்டி. மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் கொண்டது. புலமைப்பரிசில் பரீட்சையில் கூடிய மதிப்பெண்களை எவ்வாறு பெறலாம் என்ற அறிவுரை மிகவும் எளிய நடையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 3004)





## 55

**புலமைச் சுடர்.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1ஆவது பதிப்பு, பங்குனி 2003. (கட்டுகஸ்தொட்டை: ஜே.ஜே.பதிப்பகம், இல. 122, கலகெதர வீதி).

80 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 20.5x14 சமீ.

சிந்தனை வட்டத்தின் 164ஆவது வெளியீடு. 2003ஆம் ஆண்டிலும் அதன் பின்பும் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான பயிற்சி வழிகாட்டிக் குறிப்பேடுகளின் தொகுப்பு. எண் புலமை, சொற் புலமை, மொழிப் புலமை, ஆய்ந்தறிதற் புலமை, தர்க்கப் புலமை, கணிதப் புலமை, கட்புலமை ஆகிய அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2015)

## 56

**புலமைச் சுடர் 02.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஜுலை 2004. (கட்டுகஸ்தொட்டை: ஜே.ஜே. பதிப்பகம், இல. 122, கலகெதர வீதி).

80 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 20x14 சமீ.

சிந்தனை வட்டத்தின் 188ஆவது வெளியீடு. தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான பயிற்சி வழிகாட்டிக் குறிப்பேடுகளின் தொகுப்பு. எண் புலமை, சொற் புலமை, மொழிப் புலமை, ஆய்ந்தறிதற் புலமை, தர்க்கப் புலமை, கணிதப் புலமை, கட்புலமை ஆகிய அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. பகுதி 1,2 ஆகியவற்றில் இடம்பெறும் வினாக்களைத் தழுவிய வழிகாட்டலாக குறிப்பேடுகள் இணைக்கப்பட்டுள்ளன. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 3007)

## 57

**புலமைச் சுடர் 03.**பீ..எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடத்தலவின்னை 20802: சிந்தனைவட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1ஆம் பதிப்பு, ஜுலை 2005. (கண்டி: கிரியேடிவ் பதிப்பகம், 3A பஹிரவாகந்த வீதி).
64 பக்கம், படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 110., அளவு 20x14 சமீ. ISBN : 955-8913-24-3.





இந்நூல் சிந்தனைவட்டத்தின் 205ஆவது வெளியீடாகும். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான பயிற்சி வழிகாட்டிக் குறிப்பேடுகளின் தொகுப்பு. விளக்கப்படங்களுடன் குறிப்புகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. புலமைப்பரிசில் பரீட்சை வினாப்பத்திரங்களில் இடம்பெறக் கூடிய எண் புலமை, சொற் புலமை, மொழிப் புலமை, ஆய்ந்தறிதற் புலமை, தர்க்கப் புலமை, கணிதப் புலமை, கட்புலமை போன்றவற்றின் அடிப்படையில் அமைந்த வினாக்களுக்கு விடையெழுதக் கூடிய முறைகள் இலகுவாக முன்வைக்கப்பட்டுள்ளன. (நூல்தேட்டம் தொகுதி 5)

**58**

**புலமைப் பரிசில் அறிவு ஒளி: தொகுதி 1.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 2ஆவது பதிப்பு, மே 1999, 1ஆவது பதிப்பு, மார்ச் 1999. (கட்டுகஸ்தொட்டை: ஜே.ஜே. பிரின்டர்ஸ், 122, குருநாகலை வீதி).
(5), 67 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 80., அளவு: 28x21.5 சமீ.





தரம் 5, புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினா-விடை. செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கும் வகையில் வினாப்பத்திரங்கள் 1முதல் 10 வரை அமைந்துள்ளன. சிந்தனை வட்டத்தின் 106ஆவது வெளியீடு. மாணவர்களை கட்டம் கட்டமாக பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் நுணுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2016)






**59**

**புலமைப் பரிசில் அறிவு ஒளி: தொகுதி 2.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 2ஆவது பதிப்பு, மார்ச் 2000, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 2000. (கட்டுகஸ்தொட்டை: ஜே.ஜே. பிரின்டர்ஸ், 122, குருநாகலை வீதி).
(4), 62 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 80., அளவு: 28x21.5 சமீ.

தரம் 5, புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினா-விடை. செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கும் வகையில் வினாப்பத்திரங்கள் 1முதல் 10 வரை அமைந்துள்ளன. சிந்தனை வட்டத்தின் 110ஆவது வெளியீடு. மாணவர்களை படிப்படியாக பரீட்சைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயத்தப்படுத்தும் வழிகாட்டல் சேர்க்கப்பட்டுள்ளது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2017)

## 60

**புலமைப் பரிசில் அறிவு ஒளி: தொகுதி 3.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 2வது பதிப்பு, ஜூன் 2000, 1வது பதிப்பு, மே 2000. (கட்டுகஸ்தொட்டை: ஜே.ஜே. பிரின்டர்ஸ், 122, குருநாகலை வீதி).
80 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 80., அளவு: 28x21.5 சமீ.

2001/2002ம் ஆண்டுகளில் தரம் 5, புலமைப்பரிசில் பரீட்சை எழுத வுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும். செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கும் வகையில் வினாப்பத்திரங்கள் அமைந்துள்ளன. சிந்தனை வட்டத்தின் 111வது வெளியீடு. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2018)







## 61

**புலமைப்பரிசில் அறிவு ஒளி: தொகுதி 4.** பீ.எம்.புன்னியாமீன்,





மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2000. (கட்டுகஸ் தொட்ட: எக்ஸ்பிரஸ் பிரின்ட் ஷொப், மடவளை வீதி,)
(4), 68 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21.5x28 சமீ.

சிந்தனை வட்டத்தின் 108வது வெளியீடு. 2001/2002ம் ஆண்டிலும் அதன் பின்னரும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான 32 மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் அடங்கியுள்ளன. அரசாங்கப் பரீட்சைப் பற்றிய பயத்தினை மாணவர் மனங்களிலிருந்து நீக்குவதற்கு நூலாசிரியர்கள் பிரயத்தனப்பட்டிருப்ப தை அவதானிக்க முடிகின்றது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2019)

## 62

**புலமைப் பரிசில் ஆரம்ப வழிகாட்டி.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின் னை மடிகே, 2வது பதிப்பு, ஜனவரி 2000, 1வது பதிப்பு, டிசம்பர் 1999. (கட்டுகஸ்தொட்ட: ஜே.ஜே.பிரின்டர்ஸ், 122 குருணாகலை வீதி).
60 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 80., அளவு: 28x21.5 சமீ.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் போது ஒன்றிணைக்கப்பட்ட பாடத் திட்டத்தின்கீழ் தரம் 3, தரம் 4 பாடப் பரப்புகளையும் தழுவி யதாகவே பரீட்சை வினாக்கள் இடம்பெறும். எனவே அதற்கேற்ப தரம் 3, தரம் 4 பாடத்திட்டத்தைத் தழுவியதாகத் தயாரிக்கப்பட்ட மாணவர் வழிகாட்டி நூல் இதுவாகும். இந்நூலில் மொத்தமாக பத்து மாதிரி வினாத்தாள்கள் இணைக்கப்பட்டுள்ளன. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 3008)

## 63

**புலமைப் பரிசில் சுடர் ஒளி.** பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 2001, (Katugastota: J.J. Printers, 122, Kurunegala Road).
56 பக்கம், படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 60. அளவு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









28x21.5 சமீ.

இந்நூல் 2001 – 2002 ஆண்டுகளிலும், அதற்குப் பின்பும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவமணிகளின் நலன்கருதி வெளியிடப்பட்டுள்ளது. தரம் 3 தரம் 4 பாடப்பரப்பை உள்ளடக்கி தரம் 5 புலமைப்பரிசில் வினாப்பத்திர மாதிரிக்கமைய 10 மாதிரி வினாத்தாள்கள் இந்நூலில் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. (நூல்தேட்டம் தொகுதி 5)

## 64

**புலமைப்பரிசில் புலமைத் தீபம்.** பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2004. (Kandy: Creative Printers & Designers, No.3/A Bahiravakanda Road)
240 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 28x21.5 சமீ., ISBN: 955-8913-17-0.

சிந்தனை வட்டத்தின் 190வது வெளியீடு. 2005 ஆண்டிலும் அதன் பின்னரும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான 30 மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் அடங்கியுள்ளன. 2004 ஆகஸ்ட் அரசாங்க வினாப்பத்திரமும் மேலதிகமாக இணைக்கப்பட்டுள்ளது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2020).





## 65

**புலமைப்பரிசில் முன்னோடி வழிகாட்டி.** பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 3ம் பதிப்பு, அக்டோபர் 2002, 1வது பதிப்பு, நவம்பர் 1998. (Katugastota: 122, J.J. Printers, Kurunegala Road)
64 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 28x21.5 சமீ.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தரம் 4 பாடத்திட்டத்தைத் தழுவித் தயாரிக்கப்பட்ட 10 மாதிரி வினாத்தாள்கள் இப்புத்தகத்தில் இணைக்கப்பட்டுள்ளன. அத்துடன் வினாப்பத்திரங்களுக்கான விடைகளும், மேலதிக விளக்கத்துக்கான உசாத்துணைக் குறிப்புகளும் உருவப்படங்கள் மூலமாக விளக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். (நூல்தேட்டம் தொகுதி 5)

## 66

**புலமைப்பரிசில் வழிகாட்டிக் களஞ்சியம்.** பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 3ம் பதிப்பு, அக்டோபர் 2002, 1வது பதிப்பு, ஜனவரி 1999. (Katugastota: J.J. Printers, 122, Kurunegala Road).











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 28x21.5 சமீ.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்காக வேண்டி தரம் 4, தரம் 5 பாடத்திட்டத்தைத் தழுவிய குறிப்புகள் சுருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன. குறிப்புக்களை எளிமையாக மாணவர்கள் விளங்கத்தக்க வகையில் பொருத்தமான இடங்களில் புகைப்படங்களையும், சித்திரங்களையும் சேர்த்திருப்பது இந்நூலின் சிறப்பம்சமாகும். (நூல்தேட்டம் தொகுதி 5)

## 67

**புலமைப் பரிசில் விவேகக் களஞ்சியம்.** பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 6வது பதிப்பு, மார்ச் 2004. 1வது பதிப்பு, நவம்பர் 2002. (கொழும்பு 12: Print Com (PVT) Ltd, 134, Hulfsdorp Street) (26), 190 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 28x21.5 சமீ.

சிந்தனை வட்டத்தின் 177வது வெளியீடு. 2003ம் ஆண்டிலும் அதன் பின்னரும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான 32 மாதிரி வினாப்பத்திரங்களும், விடைகளும் அடங்கியுள்ளன. 2003 புலமைப்பரிசில் விவேகக் களஞ்சியம். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2021)

## 68

**புலமைப் பரிசில் விவேகச் சுரங்கம்.** பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 2வது பதிப்பு, மார்ச் 2002. 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (கொழும்பு 12: Print Com (PVT) Ltd, 134, Hulfsdorp Street)
152 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 28x21.5 சமீ.

சிந்தனை வட்டத்தின் 128வது வெளியீடு. 2002ம் ஆண்டிலும், அதன்





பின்னரும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான 32 மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் அடங்கியுள்ளன. 2001 ஆகஸ்ட் 12ம் திகதி நடைபெற்ற தரம் 5 க்கான புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 160 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களின் ஒரு தொகுதிப் புகைப் படங்கள் நூலின் அட்டையை அலங்கரிக்கின்றன. 2002 புலமைப் பரிசில் விவேகச் சுரங்கம். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2022)







## 69

**புலமைப் பரிசில் வெற்றி ஒளி.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 2வது பதிப்பு, நவம்பர் 2001. 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2000. (கொழும்பு 12: Print Com (PVT) Ltd, 134, Hulfsdorp Street)
280 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 28x21.5 சமீ.

2001-2002ம் ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரங்களும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைகளும் அடங்கியது. இது சிந்தனை வட்டத்தின் 127வது வெளியீடு. பரீட்சையை எழுதக் கூடிய மாணவர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளமையும், அதற்கேற்ப வினாப்பத்திரங்களினூடாக வழிநடத்தப்பட்டிருப்பதும் இந்நூலின் சிறப்பம்சமாகும். **(நூல்தேட்டம் பதிவிலக்கம் 2023)**

**70**

**புலமைப் பரிசில் வெற்றி வழிகாட்டி: தொகுதி 1.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 2வது பதிப்பு, ஓகஸ்ட் 1998, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (கட்டுகஸ்தொட்ட: ஜே.ஜே.பிரின்டர்ஸ், 122 குருநாகலை வீதி)
82 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 28x22 சமீ.

இலங்கையில் பரீட்சைத் திணைக்களத்தினால் மாணவர்களை மையமாகக் கொண்டு நடத்தப்படும் முதலாவது போட்டிப் பரீட்சை தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையாகும். இத்தகைய மாணவர்களை வழிநடத்தக் கூடிய வகையில் புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன் நூலாசிரியர்கள் பல புலமைப் பரிசில் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளனர். இந்த அடிப்படையில் இவர்களின் மற்றுமொரு புலமைப்பரிசில் நூலான இந்நூலில் 1999/2000 ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் அடங்கியுள்ளன. **(நூல்தேட்டம் பதிவிலக்கம் 3009)**

**71**

**புலமைப் பரிசில் வெற்றி வழிகாட்டி: தொகுதி 2.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 2வது பதிப்பு, ஓகஸ்ட் 1998, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (கட்டுகஸ்தொட்ட: ஜே.ஜே.பிரின்டர்ஸ், 122 குருநாகலை வீதி)












76 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 28x22 சமீ.

1999/2000 ஆண்டுகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் இந்நூலில் அடங்கியுள்ளன. தமது மாணவர் வாழ்க்கையில் முதலாவது போட்டிப் பரீட்சையான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மாணவர்கள் எதிர்கொள்ளக் கூடிய வகையில் படிப்படியான விளக்கத்தை வழங்கத்தக்கதாக இவ்வினாப்பத்திரங்கள் அமைந்துள்ளன. **(நூல்தேட்டம் பதிவிலக்கம் 3010)**

**72**

**புலமைப் பரிசில் வெற்றி வழிகாட்டி: தொகுதி 3.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 2வது பதிப்பு, ஓகஸ்ட் 1998, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (கட்டுகஸ்தொட்ட: ஜே.ஜே.பிரின்டர்ஸ், 122 குருநாகலை வீதி)
76 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 28x22 சமீ.

1999/2000 ஆண்டுகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் அடங்கியுள்ளன. இந்நூல் 3 தொகுதிகளில் வெளிவந்துள்ளது. தமது மாணவர் வாழ்க்கையில் முதலாவது போட்டிப் பரீட்சையான தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 புலமைப்பரிசில் பரீட்சையை மாணவர்கள் எதிர்கொள்ளக் கூடிய வகையில் படிப்படியான விளக்கத்தை வழங்கத்தக்கதாக இவ்வினாப்பத்திரங்கள் அமைந்துள்ளன. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 3011)

**73**

**புலமைப்பரிசில் வெற்றி வழிகாட்டி.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தல வின்னை மடிகே, 1ஆவது பதிப்பு, நவம்பர் 2001. (அச்சக விபரம் தரப்பட வில்லை)
220 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 28x21.5 சமீ.




சிந்தனை வட்டத்தின் 125ஆவது வெளியீடு. 2002ம் ஆண்டிலும் அதன் பின்னரும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக் கான 32 மாதிரி வினாப்பத்திரங்களும் விடைக ளும் அடங்கியுள்ளன. 2002 புலமைப்பரிசில் வெற்றி வழிகாட்டி போட்டிப் பரீட்சையொன்றிற் கான ஆயத்தத்தை மாணவர்களுக்கு வழங் கக் கூடியதாகவுள்ளது. (நூல்தேட்டம் பதி விலக்கம் 2024)

# மொழியியல் நூல்கள்

## 420 ஆங்கில மொழி

மேலும் பார்க்க: அறிமுக விஞ்ஞானமும் ஆங்கிலமும். பதிவிலக்கம் 77

## 494.8(2) தமிழ்ப் பாடநூல்கள







**74**

**அறிமுகத் தமிழ்.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன மடிகே: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1ஆவது பதிப்பு, பெப்ரவரி 1997. (Colombo 12: AICO (pvt) Ltd, 218/5, Messenger Street).
48 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ.

புலமைப்பரிசில் வழிகாட்டித் தொடர் வரிசை 1. ஆண்டு 4,5 புதிய பாடத்திட்டத்தை உள்ளடக்கிய நூல். இந்நூலில் தமிழ் எழுத்துக்கள், தமிழ்ச் சொற்கள், தமிழ் இலக்கணம், பால், எண், இடம், காலம், வாக்கிய உறுப்புக்கள், புணர்தல், தொகுதிச் சொற்கள், இரட்டைக்கிளவி, இணைமொழிகள், பலமொழிகளும் அவை வெளிப்படுத்தும் கருத்துக்களும், ஒத்த கருத்துச் சொற்கள், சொற்றொடர்களுக்குரிய தனிச்சொற்கள் போன்ற பல விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2287)

# விஞ்ஞான நூல்கள்

## 500 தூய விஞ்ஞானம

**75**

**அறிமுக விஞ்ஞானம்: தொகுதி** 1. பீ.எம். புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, உடத்தலவின்ன,1ஆவது பதிப்பு, பெப்ரவரி 1998. (கட்டுகஸ்தொட்ட: ஜே.ஜே. பிரின்டர்ஸ், 122, குருநாகலை வீதி)
80 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ.

புலமைப் பரிசில் வழிகாட்டித் தொடர் 4. ஆண்டு 4, 5 புதிய பாடத்திட்டத்தை உள்ளடக்கியது. இத் தொகுதி நாமும் சூழலும், தாவரங்கள், விலங்குகள், மண் ஆகிய நான்கு பாடங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கியது. தேவையான இடங்களில் புகைப்படங்களும், சித்திரங்களும் சேர்க்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2338)

## 76

**அறிமுக விஞ்ஞானம்: தொகுதி 2.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, உடத்தலவின்ன, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (கட்டுகஸ்தொட்ட: ஜே.ஜே. பிரின்டர்ஸ், 122, குருநாகலை வீதி)
64 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ.

புலமைப்பரிசில் வழிகாட்டித் தொடர் 5. ஆண்டு 4, 5 புதிய பாடத் திட்டத்தை உள்ளடக்கியது. இத்தொகுதி நாமும் சூழலும், தாவரங்கள், விலங்குகள், மண் ஆகிய நான்கு பாடங்களை உள்ளடக்கியது. தேவையான இடங்களில் புகைப்படங்களும், சித்திரங்களும் சேர்க்கப் பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2339)





## 77

**அறிமுக விஞ்ஞானமும் ஆங்கிலமும்.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, ஜூன் 1997. (Colombo 12: AICO Ltd., 218/5, Messenger Street)
80 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x13.5 சமீ.





தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பாடவழிகாட்டி நூலாக இந்நூல் வெளிவந்துள்ளது. அறிமுக விஞ்ஞானம் பற்றியும், ஆங்கிலம் பற்றியும் பாடப் பரப்பில் இடம்பெறும் குறிப்புக்களை எளிய நடைமுறையில் விளக்குகின்றது. புலமைப் பரிசில் பரீட்சையில் விஞ்ஞானம், ஆங்கிலம் தனி வினாப்பத்திரங் களாக இடம்பெறாவிடினும் கூட பகுதி 1, பகுதி 2 வினாப்பத்திரங்களில் இவை இணைக்கப்படும். அதற்கேற்ற வகையில் இந்நூல் தயாரிக்கப் பட்டுள்ளது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2340)

# 510 கணிதம்

## 78

**அறிமுகக் கணிதம்.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, மே 1997. (கொழும்பு 12: ஐக்கோ லிமிட்டெட், 218/5, மெசெஞ்சர் வீதி).
80 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ.




புலமைப்பரிசில் வழிகாட்டித் தொடர் இலக்கம் 2. ஆண்டு 4, 5 புதிய பாடத்திட்டத்தை உள்ளடக்கியது. இந்நூலில் எண்களை அறிதல், எண்களை ஏறு இறங்கு வரிசைப் படுத்தல், எண்கோலங்கள், சதுர எண்கள், முக்கோண எண்கள், கணிதச் செய்கைகள், பின்னங்கள், அளத்தல் முறைகள், தள உருவங் கள், வரைபுகள், திசைகள், கணிதப் புதிர்கள் ஆகியன தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை நோக்கிய பாட அலகுகளாக விளக்கப்பட்டுள்ளன. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2344)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவின்கலை,விளையாட்டுத்துறை நூல்கள்

## 796 உடற்பயிற்சி, விளையாட்டுகள்

**79**

**வில்ஸ் வேர்ல்ட் கப் 1996: நினைவுகள்.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனைவட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 1996. (கொழும்பு 13: விஜயா கிரபிக்ஸ், 176/12, ஜம்பட்டா வீதி).
84 பக்கம், புள்ளி விபரங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 65.00, அளவு: 21x14 சமீ.



புன்னியாமீன்.

இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டுத் தொடர்பாகத் தமிழில் வெளிவந்த முதல் நூலாகக் கருதப்படுகின்றது. இந்நூல், 1996ம் ஆண்டில் வில்ஸ் உலகக் கிண்ணத்துக்கான ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளில் இணைந்து நடத்தப்பட்டன. இந்தப் போட்டித் தொடரில் 6வது உலகக் கிண்ணத்தை இலங்கை அணி சுவீகரித்துக் கொண்டது. இப்போட்டித் தொடர் பற்றிய சகல விபரங்களும், முக்கிய நிகழ்வுகளும் புள்ளிவிபரத் தகவல்களுடன் இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளன. 1975, 79, 83ம் ஆண்டுகளில் இங்கிலாந்தில் நடைபெற்ற புருடன்ஷியல் கிண்ணத்துக்கான 1வது 2வது, 3வது உலகக் கோப்பைக்கான விபரங்களும், 1987ம் ஆண்டில் இந்தியா-பாக்கிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையே நடைபெற்ற ரிலயன்ஸ் கிண்ணத்துக்கான 4வது உலகக் கோப்பைக்கான விபரங்களும், 1992ம் ஆண்டில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பென்சன்





அன்-ஹெஜஸ் கிண்ணத்துக்கான 5வது உலகக் கோப்பைக்கான விபரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2388)

# தமிழ் இலக்கிய நூல்கள்

## .8(1) தமிழ்க் கவிதைகள்

**80**

**அரும்புகள்.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 1990. (உடத்தலவின்னை: மவுண்ட்லைன் பதிப்பகம்).
126 பக்கம், விலை: இந்திய ரூபா 15., இலங்கையில் ரூபா 30., அளவு: 21x13.5 சமீ.

இது சிந்தனை வட்டத்தின் ஏழாவது வெளியீடு. கலைமகள் ஹிதாயா, மரீனா இல்யாஸ், என்.நவரட்ணம், சுமைரா அன்வர், கலைநிலா சாதிகீன், இரா.திருச்செல்வம், தலவின்னை பூதொர, நாகபூஷணி கருப்பையா, கெக்கிறாவை ஸஹானா, இஸ்லாமியச் செல்வி, சீ.வி.நித்தியானந்தன், ஆகிய பதினொரு இளம் கவிஞர்களின் கவிதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2468)

**81**

**பாலங்கள்: கவிதைத்தொகுதி.** பீ.எம்.புன்னியாமீன். (தொகுப்பாசிரியர்). உடத்தலவின்னை (இலங்கை), சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஜூலை 1996. (சென்னை 14: சித்ரா பிரின்டோகிராப்)
70 பக்கம். விலை: ரூபா 18. அளவு: 17.5x12 சமீ.

ஈழத்து இளம்கவிஞர்கள் ஐவரின் கவிதைத்தொகுதி. பஹிமா ஜஹான், மரீனா இல்யாஸ், உஸ்மான் மரிக்கார், ஜெயந்தன், சுமைரா அன்வர் ஆகிய ஐவரின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இளம்கவிஞர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







களமமைத்துக் கொடுப்பதை அடிப்படையாகக் கொண்டு இந்நூலினை புன்னியாமீன் தொகுத்துள்ளார். இது சிந்தனைவட்டத்தின் 59வது வெளியீடாகும். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 445)

**82**

**புதிய மொட்டுகள்.** பீ.எம்.புன்னியாமீன் (தொகுப்பாசிரியர்). உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1ஆவது பதிப்பு, ஜூன் 1990. (உடத்தலவின்னை: மவுண்ட் லைன் பதிப்பகம்). 100 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18x12.5 சமீ.

உஸ்மான் மரிக்கார், நஜுமுதீன், மஸீதா புன்னியாமீன், தலவின்னை சிபார், அக்குறணை ரிழ்வான், ரிஷானா ரஷீட், கலைமகள் ஹிதாயா, கலதெனிய நளீம், தமீம் அன்சார் ஆகிய 9 இளம் கவிஞர்களின் கவிதைகள் உள்ளடங்கியுள்ளன. சிந்தனை வட்டத்தின் ஆறாவது வெளியீடு. இளம்கவிஞர்களுக்கு களமமைத்துக் கொடுப்பதை அடிப் படையாகக் கொண்டு இந்நூலினை புன்னியாமீன் தொகுத்துள்ளார். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2525)





## 894.8(4) தமிழ்ச் சிறுகதைகள்

**83**

**அந்த நிலை.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 13, உடத்தலவின்னை மடிகே, 1ஆவது பதிப்பு, ஜனவரி 1990. (அக்குறணை: எம்.வை.எம்.சலீம், நீலான் பிரின்டர்ஸ், 372/1, மாத்தளை வீதி). 96 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 18x12.5 சமீ.

ஆசிரியரின் மூன்று நெடுங்கதைகள் கொண்ட தொகுப்பு. போலிகளை நம்பி ஏமாறாது புத்திபூர்வமாக அவற்றை எதிர்கொண்டு வெல்லும் பெண்ணின் கதையாக **வேதமோதும் சாத்தான்கள்** என்ற கதையும், செய்யும் தொழிலிலே திருப்திகண்டு உயரும் ஒருவனது கதையாக **இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு** என்ற கதையும் திருமணங்களில் சுயகௌரவத்திற்காக நுழைக்கப்படும் ஆடம்பரங்கள் எவ்வாறு சமூகத் தை பாதிக்கின்றன என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுவதாக **அந்த நிலை** என்ற தலைப்புக் கதையும் அமைகின்றன. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2661)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 84

**இனி இதற்குப் பிறகு ...** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1ஆவது பதிப்பு, ஜுலை 2003. (கொழும்பு 12, Print Com (Pvt) Ltd, 134 , Hulfsdorp Street )
120 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5x14 சமீ., ISBN: 955-8913-03-0

புன்னியாமீனின் ஏழாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். 1990 – 2000 ஆண்டு காலப் பகுதியில் இலங்கையின் தேசிய பத்திரிகைகளிலும், தாமரை (இந்தியா) உட்பட இலங்கை, இந்திய சஞ்சிகைகளிலும் பிரசுரமான 11 சிறுகதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. (நூல்தேட்டம் தொகுதி 5)

## 85

**கரு.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 13, உடத்தலவின்னை மடிகே, 1ஆவது பதிப்பு, நவம்பர் 1989. (அக்குறணை: நிலான் பதிப்பகம், 372/1 மாத்தளை வீதி).
76 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 18x12.5 சமீ.

புலமைப்பரிசில் விவேகக் களஞ்சியம். (6வது பதிப்பு) 67 **(மார்ச் 2004)**
2004 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி: தொகுதி 2.40(ஏப்ரல் 2004)
2004 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி: தொகுதி 3. 41 **(மே 2004)**
2004 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி: தொகுதி 4. 42 **(மே 2004)**
புலமைச் சுடர் 02. 56 **(ஜூலை 2004)**
இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு: முதலாம் பாகம். 101 **(ஆகஸ்ட் 2004)**
இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு: இரண்டாம் பாகம். 102 **(செப்டெம்பர் 2004)**
புலமைப்பரிசில் புலமைத் தீபம். (1வது பதிப்பு) 64 **(செப்டெம்பர் 2004)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப்பரிசில் விவேகக் களஞ்சியம். (7வது பதிப்பு)67(செப்டெம்பர் 2004)
தரம் 4 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி. 54 **(ஒக்டோபர் 2004)**

## 2005

2005 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி: தொகுதி 1.43**(ஏப்ரல் 2005)**
2005 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி: தொகுதி 2.44**(ஏப்ரல் 2005)**
2005 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி: தொகுதி 3.45**(ஏப்ரல் 2005)**
2005 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி: தொகுதி 4.46**(ஏப்ரல் 2005)**
மாதிரிக் கட்டுரைகள்: தரம்: 5 (7வது பதிப்பு) 92 **(மே 2005)**
புலமைச் சுடர் 03. 57 **(ஜூலை 2005)**
தரம் 4 புலமை விருட்சம். 53 **(செப்டெம்பர் 2005)**
இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத் திரட்டு: மூன்றாம் பாகம். 103 **(செப்டெம்பர் 2005)**
புலமைப்பரிசில் புலமைத் தீபம். (2வது பதிப்பு) 64 **(நவம்பர் 2004)**

## 2006

2006 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 1). 47 **(பெப்ரவரி2006)**
புலமைப்பரிசில் புலமைத் தீபம். (3வது பதிப்பு) 64 **(மார்ச் 2006)**
2006 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 2).48**(ஏப்ரல் 2006)**
2006 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 3).49 **(மே 2006)**
2006 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி 4).50 **(மே 2006)**
பொது அறிவுச்சரம் (தொகுதி 01). 03 **(செப்டெம்பர் 2006)**
பொது அறிவுச்சரம் (தொகுதி 02). 04 **(செப்டெம்பர் 2006)**
புலமைப்பரிசில் புலமைத் தீபம். (4வது பதிப்பு) 64 **(செப்டெம்பர் 2006)**
பொது அறிவுச்சரம் (தொகுதி 03). 05 **(செப்டெம்பர் 2006)**
பொது அறிவு - நிகழ்காலத் தகவல் துளிகள் (தொகுதி 01). 02 **(ஒக்டோபர் 2006)**
பொது அறிவுச்சரம் (தொகுதி 04). 06 **(ஒக்டோபர் 2006)**
பொது அறிவுச்சரம் (தொகுதி 05). 07 **(ஒக்டோபர் 2006)**
பொது அறிவுச்சரம் (தொகுதி 06). 08 **(ஒக்டோபர் 2006)**
2007 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி1).51**(நவம்பர் 2006)**
2007 புலமைப்பரிசில் மாணவர் வழிகாட்டி (தொகுதி2).52**(நவம்பர் 2006)**
இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி 4. 104 **(நவம்பர் 2006)**





இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி 4. 104 **(நவம்பர் 2006)**
இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி 5. 105 **(டிசம்பர் 2006)**

## 2007

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி 6. 106 **(ஜனவரி 2007)**
இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி 7.1வது பதிப்பு, 107 **(பெப்ரவரி 2007)**
நூல்தேட்டம்: இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டியதொரு பெருநதி. 91 **(பெப்ரவரி 2007)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலையகப் பதிப்புலகத்தில் ஒரு சிந்தனை வட்டம்: கலாபூஷணம பீ.எம். புன்னியாமீன

-என் செல்வராஜா-
-நூலகவியலாளர்-
இலண்டன்

**ஐக்கிய இராச்சியத்திலிருந்து வெளிவரும் 'சுடர் ஒளி' சஞ்சிகையின் ஜூலை-ஆகஸ்ட் 2005 இதழில் பிரசுரமான இக்கட்டுரை இங்கு ஒரு பதிவாகச் சேர்க்கப்பட்டுள்ளது.**

இலங்கையில் மத்திய மலையகத்தின் தலைநகராக விளங்கும் கண்டி மாநகரிலிருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள வனப்புமிகு கிராமம்தான் உடத்தலவின்னை மடிகே. இந்தக் கிராமத்தின் பெயரை படைப்பிலக்கிய உலகில் அடையா ளப்படுத்திய பெருமை, அங்கு 1988ம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு சாதாரண அமைப்பாக ஆரம்பிக்கப்பட்ட சிந்தனை வட்டம் என்ற வெளியீட்டகத்துக்கே உரியது.

'சிந்தனை வட்டம்' என்றதும் உடத்தலவின்னை மடிகே என்ற ஊர்ப்பெயரை அடுத்து, நம் மனக்கண் முன் வந்து நிற்கும் மற்றொரு பெயர் புன்னியாமீன் என்பதாகும். சிந்தனை வட்டத்தின் தாபகரும் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருமான கலாபூஷணம் புன்னியாமீன் அவர்கள் இன்று 200க்கும் அதிகமான நூல்களை வெளியிட்டு மலையகத்தில் முன்னணிப் பதிப்பாளராகத் திகழ்கின்றார். தன்னுடன் தன் மனைவி மஸீதா, மகன் சஜீர் அஹமட் ஆகியோருடன் இணைந்து சிந்தனைவட்டம் என்ற தன் சாம்ராச்சியத்தில் வெற்றிகர மாக பவனி வருகிறார்.





11.11.1960இல் பிறந்தவரான புன்னியாமீன் பாடசாலைக் காலங்களிலேயே தன்னுடைய எழுத்துத் திறனை நல்லாசிரியர்களின் துணையுடன் புடம்போட்டுக்கொண்டவர். 1973ம் ஆண்டிலிருந்து இலக்கிய உலகில் தவழத்தொடங்கியவர் புன்னியாமீன். ''அரியணை ஏறிய அரசமரம்'' என்ற உருவகக் கதையே இவரது முதலாவது படைப்பிலக்கியமாகும். தினகரன் வாரமலரில் இது 1978இல் பிரசுரமாயிருந்தது. தனது பத்தொன்பதாவது வயதிலேயே தான் எழுதிய பதினான்கு கதைகளைத் தொகுத்து 'கட்டுகஸ்தோட்டை இஸ்லாமிய சேமநலச் சங்கத்தி'னூடாக ''தேவைகள்'' என்ற தலைப்பில் சிறுகதைத் தொகுதியாக்கி வெளியிட்டுள்ளார்.

இவர் 1988இல் தாபித்த 'சிந்தனை வட்டம்' என்ற வெளியீட்ட கத்தின் வாயிலாக ''பிரித்தானியாவின் அரசியல் முறை''எனும் தனது நூலினை இப்பதிப்பகத்தின் முதல் வெளியீடாக 1988 ஜனவரியில் வெளியிட்டார். 2005 மே மாத இறுதியில் மாரிமுத்து சிவகுமார் எழுதிய மலைக்கொழுந்து என்னும் கவிதை நூலினைத் தனது நிறுவனத்தின் 204வது வெளியீடாக வெளியிட்டுள்ளார். கல்வி சார் நூல்கள், அறிவுசார் நூல்கள், வரலாற்று நூல்கள், சிறுகதைத் தொகுதிகள், நாவல்கள், கவிதைத் தொகுதிகள், பொது அறிவு நூல்கள், ஆய்வு நூல்கள் என இதுவரை 204 வெளியீடுகளிலும் மொத்தமாக 395,650 பிரதிகளை இந்நிறுவனத்தின் வாயிலாக புன்னியாமீன் அவர்கள் பதிப்பித்துள்ளார். தொடர்ச்சியாக 17 ஆண்டுகளாக சிந்தனை வட்டம் வெற்றிகரமாக மலையகத்தில் இயங்கி வருகின்றது.

புன்னியாமீன் உடத்தலவின்னை மடிகே வை.எம்.எம்.ஏ. இயக்கத் தின் காலாண்டு வெளியீடான''விடிவு'' சஞ்சிகையின் பிரதம ஆசிரியரா கவும் இருந்தவர். அந்நாட்களில் இலங்கை இஸ்லாமியருக்கென்றொரு தனியான அரசியல் கட்சி வேண்டும் என்ற கருத்தை 1979ம் ஆண்டி லேயே 'விடிவு' சஞ்சிகையின் வாயிலாக இவரும், இவரின் சகாக்க ளும் வலியுறுத்தி வந்துள்ளனர். அக்கருத்தை மேலும் வலியுறுத்தும் வகையில் 1983இல் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பிரச்சினையை கருப்பொருளாகக் கொண்டு ''அடிவானத்து ஒளிர்வுகள்'' என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாவலையும் இவர் எழுதியுள்ளார். இந்த நாவல் பின்னாளில் உருவான முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தோற்றப்பாட்டுக்கு வித்தாக அமைந்திருந்தது. ''அல்ஹிலால்'' இருவார இதழின் பிரதம ஆசிரியராகவிருந்தும் இவர் காத்திரமான அரசியல் கருத்தியல் பங்களிப்பை முஸ்லிம் சமூகத்திற்கு நல்கியிருந்தார். ''அல்ஹிலால்'' டாக்டர் H.M. மஹ்ரூப் அவர்களைத் தலைவராகக் கொண்டு செயற்பட்ட ஸ்ரீலங்கா இஸ்லாமிய காங்கிரஸின் அதிகாரபூர்வ ஏடாகக் கருதப்பட்டது.

இவரது சிந்தனை வட்டத்தின் வளர்ச்சிப் போக்கு எழுந்த மானமாக ஏற்பட்டதொன்றல்ல. 1988ம் ஆண்டில் தனது முதலாவது வெளியீட்டில் 400 பிரதிகளை மாத்திரம் பதிப்பித்த சிந்தனை வட்டம் 204 நூல்களை வெளியிட்டபின் மொத்தமாக 395,650 பிரதிகளைப் பதிப்பித்துள்ளமை பாராட்டத்தக்க விடயமாகும். சிந்தனை வட்டத்தின் 1 முதல் 50 வரையிலான வெளியீட்டின் போது 55650 பிரதிகளும் (சராசரி ஒரு வெளியீட்டில் 1113 பிரதிகள்), 51 முதல் 100 வரையிலான வெளியீட்டின் போது 88,000 பிரதிகளும் (சராசரி ஒரு வெளியீட்டில் 1760 பிரதிகள்), 101 முதல் 150 வரையிலான வெளியீட்டின்போது 138,000 பிரதிகளும் (சராசரி ஒரு வெளியீட்டில் 2760 பிரதிகள்), 151 முதல் 200 வரையிலான வெளியீட்டின்போது 102,000 பிரதிகளும் (சராசரி ஒரு வெளியீட்டில் 2040 பிரதிகள்), 201 முதல் 204வரையிலான வெளியீட்டின் போது 12,000 பிரதிகளும் (சராசரி ஒரு வெளியீட்டில் 3000 பிரதிகள்) வெளியிடப்பட்டுள்ளன. இலங்கையில் மற்றைய தமிழ் நூல் வெளியீட்டகங்களுடன் ஒப்புநோக்கும் போது இது விதந்து குறிப்பிடக்கூடியதொரு விடயமாகும்.

தனது நூல்களைப் பதிப்பிக்கவேண்டும் என்ற நோக்குடன் சிந்தனை வட்டத்தை ஆரம்பத்தில் உருவாக்கிய திரு. புன்னியாமீன் தன்னுடைய சொந்த நூல்களையும், தனது மனைவி மஸீதா புன்னியாமீனுடன் இணைந்து எழுதிய சில நூல்களையும் சேர்த்து மொத்தம் 89 நூல்களை இதுவரை வெளியிட்டுள்ளார். இலங்கையில் 89 நூல்களை எழுதி நூலுருப்படுத்திச் சாதனை படைத்துள்ள புன்னியாமீனின்





69 நூல்கள் சிந்தனை வட்ட வெளியீடுகளாக வெளிவந்தபோதிலும் கூட மீதமான 20 நூல்களும் பிற வெளியீட்டகங்களால் இலங்கையிலும், இந்தியாவிலும் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தனது நூல்களை மாத்திரமின்றி பிற எழுத்தாளர்களுக்கும் களமமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற நோக்குடன் சிந்தனை வட்டம் உஸ்மான் மரிக்கார், நஜுமுதீன், தலவின்னை சிபார், மஸீதா புன்னியாமீன், அக்குறனை ரிழ்வான், ரிஷானா ரஷீட், கலைமகள் ஹிதாயா, கலதெனிய நளீம், தமீம் அன்சார், மரீனா இல்யாஸ், சுமைரா அன்வர், கலைநிலா சாதிகீன், கெக்கிறாவை ஸஹானா தலவின்னை பூதொர, இஸ்லாமிய செல்வி, பஹீமா ஜஹான், சுலைமா-சமி- இக்பால், நயீமா சித்தீக், மௌலவி ஜே. மீராமொஹிதீன், மூதூர் கலைமேகம், சுஹைதா ஏ. கரீம், குலாம் மொஹிடீன், ஜே.எம். யாசீன், அமீனா சராப்தீன், எஸ்.எல்.எம்.மஹ்ரூப், ஏ.ஆர்.எம். ரிஸ்வி, எம்.ஐ.எஸ். மும்தாஜ், என். நவரட்ணம், இரா திருச்செல்வம், நாகபூஷணி கருப்பையா, நீலன்அணை ஜயந்தன், சீ.வி. நித்தியானந்தன், த. திரேஷ்குமார், மாரிமுத்து சிவகுமார், திருமதி கி. பொன்னம்பலம் என நீண்ட பட்டியலில் அடங்கக்கூடிய எழுத்தாளர்களுக்கும் களமமைத்துக் கொடுத்துள்ளது.

வளர்ந்த எழுத்தாளர்களை விட வளர்ந்துவரும் எழுத்தாளர்களுக்கே அதிக அளவில் சிந்தனைவட்டம் களம் அமைத்துக் கொடுத்துள்ளதை விசேடமாக அவதானிக்கலாம். உதாரணமாக, கலைமகள் ஹிதாயா ரிஸ்வியின் ''தேன்மலர்கள்'', த. திரேஷ்குமாரின் ''நிஜங்களின் நிகழ்வுகள்'', சுமைரா அன்வரின் ''எண்ணச் சிதறல்கள்'', நாகபூஷணி கருப்பையாவின் ''நெற்றிக் கண்'',மாரிமுத்து சிவகுமாரின் ''மலைச்சுவடுகள்'' போன்ற கவிதைத் தொகுதிகளைக் குறிப்பிடலாம். இந்நூலாசிரியர்களின் முதல் கவிநூல்களாகவே இவை அமைந்துள்ளன.

அதே நேரம், மூத்த எழுத்தாளர்களின் நூல்களை வெளியிடவும் சிந்தனை வட்டம் பின்நிற்கவில்லை. உதாரணமாக நயீமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தீக்கின் ''வாழ்க்கை வண்ணங்கள்'', சுலைமா சமி இக்பாலின் ''திசைமாறிய தீர்மானங்கள்'', மௌலவி ஜே மீராமொஹிடீனின் ''இஸ்லாமிய கதைகள்'' போன்ற கதைத் தொகுதிகளைக் குறிப்பிட லாம். சிந்தனை வட்டத்தின் பல வெளியீடுகள் பல பதிப்புகளைப் பெற்றுள்ளன.

இலங்கையில் தமிழ்மொழியை வளர்ப்பதில் முஸ்லிம் எழுத்தா ளர்களும், கலைஞர்களும், ஊடகவியலாளர்களும் விசாலமான பங்க ளிப்பினை வழங்கியுள்ளனர். ஆனால் இத்தகைய பங்களிப்புகளானது போதிய பதிவுகள் இன்மை காரணமாக ஆய்வாளர்களுக்கும், பிற்காலச் சந்ததியினருக்கும் தெரியாமல் போய்விடுகின்றன.

இந்த நிலையைக் கருத்திற் கொண்டு ''சிந்தனை வட்டம்'' பாரிய பொருட்செலவில் ''நவமணி'' தேசிய பத்திரிகையுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் ஆய்வொன்றினை மேற்கொண்டது. திரு பீ.எம். புன்னியாமீன் அவர்களின் தலைமையில் மேற்கொள்ளப் பட்ட இவ்வாய்விலிருந்து 19ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் இருந்து 21ம் நூற்றாண்டின் தற்போதைய காலப்பகுதி வரை 2800க்கும் மேற்பட்ட முஸ்லிம் எழுத்தாளர்களும், 1250க்கும் மேற்பட்ட முஸ்லிம் ஊடகவியலாளர்களும், 300க்கும் மேற்பட்ட முஸ்லிம் கலைஞர்களு மாக மொத்தம் 4350க்கும் மேற்பட்டோர் இலங்கையில் தமிழ் வளர்க் கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இத்தகையோரின் விபரங்களைத் தொகுத்து ''இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு'' எனும் நூலை மூன்று பாகங்களில் ''சிந்தனை வட்டம்'' வெளியிட்டுள் ளது. கலாபூஷணம் புன்னியாமீன் மூலம் எழுதப்பட்ட இந்த மூன்று நூல்களும் சிந்தனை வட்டத்தின் 189வது, 193வது,200வது வெளியீ டுகளாக வெளிவந்துள்ளன. மேற்படி ஆய்வு தொடர்பாக மேலும் பல நூல்களை ''சிந்தனை வட்டம்'' வெளியிடவுள்ளது.

''சிந்தனை வட்டம்'' தனது ஆரம்ப காலகட்டங்களில் தான் வெளியிட்ட நூல்களில் வெளியீட்டுத் தரத்தினை சரியான முறையில் பேணவில்லை. ஆனால் 2000 ஆண்டிலிருந்து தான் வெளியிடும்





சகல நூல்களையும் சர்வதேச நியமங்களுக்கு உட்படுத்தி சர்வதேச தரத்தில் வெளியிட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

நூல்களை வெளியிடுவதில் மாத்திரம் தனது பணியினைச் சுருக்கிக் கொள்ளாமல் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் தமிழ் வளர்க்கும் மூத்த எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் நிறுவன ரீதியில் பாராட்டி கௌரவித்து வருவது புன்னியாமீன் அவர்களின் விசேடமான ஒரு குணாம்சமாகும்.

சிந்தனைவட்டம் ஆய்வுரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் செயற்பாடானது, ஏனைய வெளியீட்டு அமைப்புக்களில் இருந்து மாறுபட்ட போக்கினை எடுத்துக்காட்டுகின்றது. இலங்கையைப் பொருத்தமட்டில் தமிழ்பேசும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் தமிழை வளர்ப்பதில் முக்கிய பங்களிப்பினை நல்கியுள்ளர். இவர்களைப் பற்றிய பூரணத்துவமான ஆய்வுகள் இது வரை காலமும் மேற்கொள்ளப்படாமலிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். இத்தகைய பணியினை ''சிந்தனை வட்டம்'' ஆரம்பித்து செயற்படுத்தி வருவது பாராட்டக்கூடிய ஒரு விடயமாகும்.

கடந்த 32 வருடகால இலக்கியப்பணியுடன் 17 வருடகால பிரசுரப் பணியும் ஆற்றிவரும் பீ.எம். புன்னியாமீன் அவர்கள், 1995இல் மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சர் கௌரவ வி. புத்திர சிகாமணி அவர்களினால் ஹட்டனில் நடத்தப்பட்ட மத்திய மாகாண சாகித்திய விழாவில் விருதும், பொற்கிழியும் வழங்கி கௌரவிக்கப்பட் டார். மலையக கலை கலாசார சங்கம் 1999இல் நடத்திய ''ரத்னதீப'' விருது வழங்கும் வைபவத்தில் இலக்கியப் பணிக்காக அப்போதைய முதலமைச்சர் கௌரவ நந்தமித்திர ஏக்கநாயக்காவினால் ''ரத்னதீப'' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் 2002ம் ஆண்டில் மத்திய மாகாண சபையின் கல்வி இந்துக்கலாசார கைத்தொழில் அமைச்சர் கௌரவ வீ. இராதா கிருஷ்ணன் அவர்கள் மூலம் ''ரத்னதீப சிறப்புவிருது'' வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அண்மையில் 2004இல் இவரது தொடர்ந்த கலை, இலக்கியப் பணிக்காக இலங்கை அரசு ''கலாபூஷண'' விருது வழங்கி கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத்தின் வெளியீட்டுத்துறையில் ஒரு துருவ நட்சத்திரமாக மின்னும் பீ.எம். புன்னியாமீன் புலம்பெயர்ந்து சென்ற ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் பற்றிய சுயவரலாற்றுக் கட்டுரைத் தொடரொன்றை இலங்கையில் வெளியாகும் நவமணி வார இதழில் வாரம் தோறும் வெளியிடவுள்ளார். இத்தொடரில் இடம்பெறும் முதல் 25 கட்டுரைகளை நூலுருவிலும் வெளியிடவும் நடவடிக்கைகள் எடுத்துள்ளார். தங்கள் சுயவரலாற்றுப் பதிவினை ஈழத்தில் பதிவுசெய்துகொள்ள விரும்பும் புலம்பெயர்ந்த ஈழத்துத் தமிழ் கலை இலக்கியவாதிகளும், ஊடகவியலாளர்களும் தமது விபரங்களைப் பதிவுசெய்வதற்கான சுயவிபரப்பதிவுப் படிவங்களை இக்கட்டுரையாசிரியரிடமிருந்தோ, திரு பீ.எம். புன்னியாமீன் அவர்களிடமிருந்து நேரடியாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

பீ.எம். புன்னியாமீன்
சிந்தனை வட்டம்
இல 14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை 20802, ஸ்ரீலங்கா,

*(நன்றி: சுடரொளி U.K. ஜூலை-ஆகஸ்ட் 2005)*
*(மீள் பிரசுரம்: 'நவமணி' 20-08-2005)*





# சிந்தனை வட்டம் – ஓர் ஆய்வு –



-என் செல்வராஜா-
- நூலகவியலாளர்-
இலண்டன்

*ஐக்கிய இராச்சியத்தில் இருந்து திருவாளர் இ. பத்மநாப ஐயர் அவர்களினால் தொகுத்து வெளியிடப்படவுள்ள தமிழ்வெளியீட்டாளர்களின் விபரக்கொத்திற்காக பிரபல எழுத்தாளரும், நூலகவியலாளரும், 'நூல்தேட்டம்' நூலாசிரியருமான திருவாளர் என். செல்வராஜா அவர்களினால் 2005 இறுதியில் சிந்தனைவட்டம் பற்றி மேற்கொண்ட முழுமையான ஆய்வு அறிக்கை மீள திருத்தியமைக்கப்பட்டு இந்நூலில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. இதில் இடம்பெற்றுள்ள தகவல்கள் 2007 பெப்ரவரி வரையிலானதாகும்.*

## அறிமுகம்

இலங்கையில் மத்திய மலையகத்தின் தலைநகராக விளங்கும் கண்டி மாநகரிலிருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள வனப்புமிகு கிராமமான உடத்தலவின்னை மடிகேயைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் வெளியீட்டுப் பணியகமே சிந்தனை வட்டமாகும்.

1988ம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு சாதாரண அமைப்பாக ஆரம்பிக்கப்பட்ட "சிந்தனை வட்டம்" 2003 ஜூலை 30ம் திகதி முதல் இலங்கை அரசின் 1982ம் ஆண்டின் 17ம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனியாக, 'வரையறுக்கப்பட்ட சிந்தனை வட்டம் வெளியீட்டாளர்கள் (தனியார்) கம்பனி" எனும் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கூட்டிணைப்புச் சான்றிதழ்: 15 (I) ஆம் பிரிவிற்கிணங்க இக்கம்பனியின் பதிவிலக்கம் N (PVS) 34586 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் முகாமைத்துவப் பணிப்பாளராக 'கலாபூஷணம் புன்னியாமீன்' அவர்களும், பணிப்பாளர் சபையின் ஏனைய உறுப்பினர்களாக திருமதி மஸீதா புன்னியாமீன், திரு சஜீர் அஹமட் புன்னியாமீன் ஆகியோரும் பணியாற்றி வருகின்றனர்.

'பிரித்தானியாவின் அரசியல் முறை 'எனும் நூலினை தனது முதல் வெளியீடாக வெளியிட்ட 'சிந்தனை வட்டம்' 2007 பெப்ரவரி மாத இறுதியில் 'எஸ்.எல்.எம். மஹ்ரூப்' எழுதிய 'நவீன பொதுஅறிவுச் சுடர்' (திருத்திய 2வது பதிப்பு) எனும் நூலினை தனது 243வது வெளியீடாக வெளியிட்டுள்ளது.

கல்வி சார் நூல்கள், அறிவுசார் நூல்கள், வரலாற்று நூல்கள் சிறுகதைத்தொகுதிகள், நாவல்கள், கவிதைத்தொகுதிகள், பொது நூல்கள், ஆய்வுநூல்கள் என இதுவரை 243 நூல்களை வெளிக் கொணர்ந்துள்ள ''சிந்தனை வட்டம்'' தனது 243 வெளியீடுகளிலும் மொத்தமாக 459,300 பிரதிகளைப் பதிப்பித்துள்ளது.

## உருவாக்கம்.

இலங்கையில் தமிழ்மொழி மூலம் நூல்களை வெளியிடும் வெளியீட்டகங்களை ஆராயுமிடத்து ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதுகளின் ஆரம்பப் பகுதியில் 'வீரகேசரி' வெளியீடுகளும், 'ஜனமித்திரன்' வெளியீடுகளும் ஒரு பொது நிறுவன அமைப்பாக Express Newspapers (Cey) Ltd மூலம் தமிழ் நூல்களை வெளியிட்டது. இது தவிர ஏனைய பெரும்பாலான வெளியீட்டு அமைப்புகள் தனிப்பட்ட அமைப்புக்களாகவே இயங்கியதை அவதானிக்கலாம். அண்மைக் காலத்தில் கூட அதிகளவில் நூல்களை வெளியிட்டுள்ள வெளியீட்டகங்களில் இத்தகைய நிலையினைக் காண முடிகின்றது. உதாரணமாக முப்பத்தைந்து நூல்களுக்கு மேல் வெளியிட்டுள்ள 'மல்லிகைப் பந்தல்' - திரு டொமினிக் ஜீவாவை மூலமாகக் கொண்ட வெளியீட்டு அமைப்பாகவும், நூறு புத்தகங்களுக்கு மேல் வெளியிட்டுள்ள 'தமிழ்மன்றம்' - திரு எஸ். எம். ஹனீபாவை மையமாகக் கொண்ட வெளியீட்டு அமைப்பாகவும், அதேபோல இருநூறு புத்தகங்





களுக்கு மேல் வெளியிட்டுள்ள ''சிந்தனை வட்டம்'' கலாபூஷணம் புன்னியாமீனை மையமாகக் கொண்ட வெளியீட்டு அமைப்பாகவும் செயற்பட்டு வருவதைக் குறிப்பிடலாம்.

சிந்தனைவட்டத்தின் உருவாக்கம் பற்றி ''இரட்டைத் தாயின் ஒற்றைக் குழந்தைகள்'' எனும் சிந்தனை வட்டத்தின் நூறாவது வெளியீட்டில் 'புன்னியாமீன்' அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

''...EPI *கல்வி நிலையத்தில் நான் பேராதனைப் பல்கலைக் கழக முதற்கலைத் தேர்வு மாணவர்களுக்கு 'அரசறிவியல்' கற்பித்துக் கொடுத்துக் கொண்டிருந்தேன் 'அரசறிவியல்' பகுதி* II *வினாப்பத்திரத்தில் பிரித்தானிய அரசாங்க முறையை இலங்கை அரசாங்க முறையுடன் தொடர்பு படுத்திய பல வினாக்கள் இடம்பெறும். ஆனால் பிரித்தானிய அரசாங்க முறை தொடர்பாகக் கற்க தமிழ்மொழி மூலம் மாணவர்களுக்குப் புத்தகங்கள் எதுவுமே இருக்கவில்லை. எனவே பிரித்தானிய தூதுவராலயத்துடன் தொடர்பு கொண்டு தேவையான நூல்கள், அறிக்கைகள், தரவுகள் போன்றவற்றைப் பெற்று அவற்றின் துணையுடன் 'பிரித்தானியாவின் அரசாங்க முறை' எனும் நூலை எழுதினேன்....*

*....இலக்கியத்துக்குப் புறம்பாக நான் எழுதிய முதல் நூல் அது. ஆனால் அந்நூலை வெளியிட்டுக்கொள்ள எத்தனையோ வெளியீட்டு அமைப்புக்களுடன் தொடர்பு கொண்ட போதிலும் கூட வெற்றி கிடைக்கவில்லை... எனவே தான் இறுதியாக என்னுடைய நூலை வெளியிட வேண்டும் என்ற நோக்கில் என் மனைவியுடன் இணைந்து 'சிந்தனை வட்டம்'' எனும் வெளியீட்டகத்தை உருவாக்கினேன்....''*

*(பக்கம் 27)*

இலங்கையில் உள்ள வெளியீட்டு அமைப்புக்களின் உருவாக்கத்தினை ஆராயும் போது காணக்கூடிய ஒரு பொதுவான பண்பு இதுவாகும். இலங்கையில் வாழக்கூடிய பல எழுத்தாளர்கள் தமது படைப்புக்களை நூலுருப்படுத்திக் கொள்ள எவ்வளவோ பிரயத்தனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டாலும் கூட வெளியீட்டு நிறுவனங்கள் முன்வராமை காரணமாக அவர்களின் முயற்சிகள் தோல்வியில் முடியும் சந்தர்ப்பங்கள் அதிகம். இப்படிப்பட்ட நிலையில் தமது ஆக்கத்தினை எவ்வாறாவது நூலுருப் படுத்தியே ஆக வேண்டும் என்ற வெறியில் விரல்விட்டெண்ணக்கூடிய ஒருசில எழுத்தாளர்கள் தாமே வெளியீட்டு அமைப்புக்களை உருவாக்கிக் கொண்டு தமது நூல்களை வெளியிட்டுக் கொள்வர். ஓரிரு வெளியீடுகளுடன் இந்த வெளியீட்டு அமைப்புக்களின் முகவரிகள் மறைந்துவிடும்.

'சிந்தனை வட்டம்' இந்நிலையில் இருந்து மாறுபட்டுள்ளது. தன்னுடைய நூலினை வெளியிட வேண்டும் என்ற நோக்கில் புன்னியாமீன் சிந்தனைவட்டத்தினை உருவாக்கினாலும் கூட தொடர்ச்சியாக 19 ஆண்டுகளாக அது இயங்கிவருகின்றது. 1988 ஜனவரியில் தனது முதலாவது நூலினைப் பதிப்பித்த சிந்தனை வட்டம் 1989 பெப்ரவரியிலே தனது இரண்டாவது நூலினைப் பதிப்பித்தது. ஆனால் 1989 நவம்பருக்கும் 1990 டிசம்பருக்கும் இடையில் ஏழு நூல்களை வெளியிட்டுள்ளது. இவற்றுள் நான்கு சிறுகதைத் தொகுதிகளும், இரண்டு கவிதைத் தொகுதிகளும் அடங்கும். ஒரு தனியார் வெளியீட்டு அமைப்பினைப் பொருத்தமட்டில்; குறிப்பாக இலங்கையில் தமிழ்நூல் வெளியீட்டமைப்பினைப் பொருத்தமட்டில் இது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## வளர்ச்சிப் போக்கு

எந்தவொரு வெளியீட்டு அமைப்பினையும் பின்வரும் அடிப் படையில் தொகுத்தாராயும் போது அதனது வளர்ச்சிப் போக்கினை இலகுவான முறையில் அளவிடக் கூடியதாக இருக்கும்.

1. ஆண்டு தோறும் வெளியிடும் நூல்களின் எண்ணிக்கை.
2. வெளியிடும் பிரதிகளின் எண்ணிக்கை
3. வெளியீட்டகத்தால் பயன்பெற்றோர்.





இந்த அடிப்படையில் சிந்தனை வட்டத்தினையும் ஆராயலாம்.

## ஆண்டு தோறும் வெளியிடும் நூல்களின் எண்ணிக்கை

1988ம் ஆண்டில் ஒரு நூலினை மட்டும் வெளியிட்ட சிந்தனை வட்டம் இன்றுவரை 243 நூல்களை வெளியிட்டுள்ளது. அதாவது கடந்த 19 ஆண்டுகளுள் சராசரியாக ஆண்டொன்றுக்கு 13 நூல் களை வெளிக்கொணர்ந்துள்ளது. இவைகளுள் 242 நூல்கள் தமிழ் மொழிமூல நூல்களாகும். இதனைப் பின்வரும் அட்டவணையிலிருந்து கண்டு கொள்ளலாம்.

| ஆண்டு | வெளியிட்ட நூல்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1988 | 01 |
| 1989 | 03 |
| 1990 | 05 |
| 1991 | 08 |
| 1992 | 09 |
| 1993 | 09 |
| 1994 | 09 |
| 1995 | 08 |
| 1996 | 08 |
| 1997 | 12 |
| 1998 | 14 |
| 1999 | 08 |
| 2000 | 20 |
| 2001 | 14 |
| 2002 | 24 |
| 2003 | 29 |
| 2004 | 14 |
| 2005 | 18 |
| 2006 | 26 |
| 2007 பெப்ரவரி மாதம் வரை | 09 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி அட்டவணையிலிருந்து சிந்தனை வட்டம் ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கமைய செயற்படுவதையும் ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கிச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

## வெளியிட்ட பிரதிகளின் எண்ணிக்கை.

வெளியிட்ட பிரதிகளின் எண்ணிக்கை என்பது வெளியீட்டகத்தின் நன்மதிப்பினையும், வாசகர் மத்தியில் காணப்படக்கூடிய வரவேற்பினையும் அளவிடக் கூடிய ஓர் அளவு கோலாகக் கருதலாம். தொலைக்காட்சிகளின் செல்வாக்குகள் அதிகரித்துள்ள இன்றைய காலகட்டத்தில் மக்கள் மத்தியில் வாசிப்புத் திறன் வெகுவாகக் குறைந்துள்ளதை அனைவரும் ஏற்றுக்கொள்வர். குறிப்பாக இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் இத்தகைய பாதிப்பு மிக விசாலமானது. எனவே வெளியீட்டகம் ஒன்று தமிழ்மொழி நூல்களை இலங்கையில் அச்சிடும்போது அச்சிடப்படும் பிரதிகளின் எண்ணிக்கை சிந்திக்கப்பட வேண்டிய விடயமாக மாறியுள்ளது.

1988ம் ஆண்டில் தனது முதலாவது வெளியீட்டில் 400 பிரதிகளை மாத்திரம் பதிப்பித்த சிந்தனை வட்டம்; 243 புத்தகங்களை வெளியிட்டபின் மொத்தமாக 459,300 பிரதிகளைப் பதிப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-50 | வரை | 55,650 | பிரதிகள் | சராசரி | 1113 |
| 51-100 | வரை | 88,000 | பிரதிகள் | சராசரி | 1760 |
| 101-150 | வரை | 138,000 | பிரதிகள் | சராசரி | 2760 |
| 151-200 | வரை | 102,000 | பிரதிகள் | சராசரி | 2040 |
| 201-243 | வரை | 75,650 | பிரதிகள் | சராசரி | 1179 |

இலங்கையில் தமிழ் நூல்வெளியீட்டங்களுடன் ஒப்புநோக்கும் போது இது குறிப்பிடக் கூடிய ஒரு விடயமே.





## வெளியீட்டகத்தால் பயன்பெற்றோர்.

தன்னுடைய நூல்களைப் பதிப்பிக்க வேண்டும் என்ற நோக்குடன் சிந்தனை வட்டத்தை உருவாக்கிய புன்னியாமீன் தன்னுடைய சுயநூல்களையும், தன் மனைவி மஸீதா புன்னியாமீனுடன் இணைந்து எழுதிய நூல்களையுமாக மொத்தம் 110 நூல்களை வெளியிட்டுள்ளார். இலங்கையில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் அல்ஹாஜ் ஜே. மீராமொஹிதீன் ''இலங்கையில் 100 நூல்களுக்கு மேல் எழுதிவெளியிட்டுள்ள முதலாவது முஸ்லிம் எழுத்தாளர் புன்னியாமீன்'' எனக்குறிப்பிட்டிருந்தார்.

தற்போது 110 நூல்களை எழுதி நூலுருப்படுத்தி சாதனை படைத்துள்ள புன்னியாமீனின் 90 நூல்கள் சிந்தனை வட்ட வெளியீடாக வெளிவந்த போதிலும் கூட மீதமான 20 நூல்களும் பிறவெளியீட்டு அமைப்புக்களால் இலங்கையிலும், இந்தியாவிலும் வெளியிடப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்க விடயமாகும். அதே நேரம் தனது நூல்களை மாத்திரமன்றி பிற எழுத்தாளர்களுக்கும் களமமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற நோக்குடன் சிந்தனை வட்டம் வெளியிட்டுள்ள நூல்களின்: எழுத்தாளர்களின் பட்டியலைப் பின்வருமாறு தொகுத்து நோக்குவோம்.

உஸ்மான் மரிக்கார், நஜுமுதீன், தலவின்னை சிபார், மஸீதா புன்னியாமீன், அக்குறணை ரிழ்வான், ரிஷானா ரஷீட், கலைமகள் ஹிதாயா, கலதெனிய நளீம், தமீம் அன்சார், மரீனா இல்யாஸ், என், நவரட்ணம், சுமைரா அன்வர், கலைநிலா சாதிகீன், இரா. திருச்செல்வம், நாகபூஷணி கருப்பையா, கெக்கிறாவை ஸஹானா, தலவின்னை பூதொர, இஸ்லாமிய செல்வி, ஸீ.வி. நித்தியானந்தன், பஹீமா ஜஹான், நீலன்அணை ஜயந்தன், சுலைமா - சமி - இக்பால், நயிமா சித்தீக், த. திரேஷ்குமார், மௌலவி ஜே.மீராமொஹிடீன், மூதூர் கலைமேகம், சுஹைதா - ஏ. கரீம், மாரிமுத்து சிவகுமார், குலாம்மொஹிதீன், திருமதி கி. பொன்னம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலம், ஜே.எம். யாசீன், அமீனா சராப்தீன், எஸ். எல்.எம். மஹ்ரூப், ஏ.ஆர்.எம். ரிஸ்வி, எம். ஐ. எஸ். மும்தாஜ், எஸ் சுதாகினி, பரிஸ்டர் ஏ.எல்.எம். ஹாஸீம், கவிஞர் கல்ஹின்னை எம். எச். எம் ஹலீம்தீன், தாரிகா மர்ஸூக், என். செல்வராஜா, நாச்சியா தீவு பர்வின், பஸ்மினா, ஏ.சீ.எம்.பரீட், திருமதி கோமதி முருகதாஸ்... என நீண்டு செல்கின்றது.

வளர்ந்த எழுத்தாளர்களை விட வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கே அதிகளவில் சிந்தனை வட்டம் களமமைத்துக் கொடுத்துள்ளதை விசேடமாக அவதானிக்கலாம். உதாரணமாக கலைமகள் ஹிதாயா ரிஸ்வியின் '**தேன்மலர்கள்**', த. திரேஷ்குமாரின் '**நிஜங்களின் நிழல்கள**' சுமைரா அன்வரின் '**எண்ணச்சிதறல்கள**', நாகபூஷணி கருப்பையாவின் '**நெற்றிக்கண**', மாரிமுத்து சிவகுமாரின் '**மலைச்சுவடுகள**', தாரிகா மர்ஸுக்கின் '**மனங்களின் ஊசல்கள்**', எஸ். சுதாகினியின் '**அடையாளம**', கோமதி முருகதாசின் **Some Basic Techniques for a Modern Librarian**, அமீனா சராப்தீனின் '**சித்திரக்கலை**', எம்.ஐ.எஸ். மும்தாஜின் '**அறிமுக ஆங்கிலம்**', எம்.ஆர்.எம். ரிஸ்வியின் '**சுவடு,**' நாச்சியா தீவு பர்வின், பஸ்மினாவின் '**புதுப்புனல்**', மூதூர் கலைமேகத்தின் '**தங்கப் பாளம்**', சுஹைதா-ஏ- கரீமீன் '**மர்ஹூம் மஸூர் கதைகள்**' போன்ற நூல்களைக் குறிப்பிடலாம். இந்நூலாசிரியர்களின் முதல் நூல்களாகவே இவை அமைந்துள்ளன.

அதே நேரம் மூத்த எழுத்தாளர்களின் நூல்களை வெளியிடவும் சிந்தனை வட்டம் பின்நிற்கவில்லை. உதாரணமாக நயீமா சித்தீக்கின் ''**வாழ்க்கை வண்ணங்கள**'', ''சுலைமா- சமி- இக்பாலின் ''**திசைமாறிய தீர்மானங்கள**'', மௌலவி ஜே மீரா மொஹிதீனின் ''**இஸ்லாமியக் கதைகள்**'', என். செல்வராஜாவின் '**நூலியல் பதிவுகள், வாய்மொழி மரபில் விடுகதைகள்**' போன்ற நூல்களையும் குறிப்பிடலாம்.

சிந்தனை வட்டத்தின் பல வெளியீடுகள் பல பதிப்புக்களைப் பெற்றுள்ளன. சர்வதேச பதிப்புரிமை நியதிகளுக்கமைய அவை





தனிப்புத்தக வெளியீடாகவே பட்டியல் படுத்தப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

## சிந்தனை வட்டத்தின் கௌரவிப்பு நிகழ்வுகள்

''சிந்தனை வட்டம்'' ஒரு தனியார் அமைப்பாகச் செயற்பட்ட போதிலும் கூட; தமிழ்வளர்க்கத் தொண்டாற்றி வரும் எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் இனங்கண்டு அவர்களை; கௌரவித்து, ஊக்குவிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது.

2000 - 11 -11ம் திகதியன்று சிந்தனை வட்டத்தின் நூறாவது வெளியீடான ''இரட்டைத்தாயின் ஒற்றைக் குழந்தை'' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா கண்டி 'சிட்டிமிஷன்' மண்டபத்தில் பெருந்திரளான மக்கள் முன்னிலையில் நடைபெற்றது. பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாகீர்த்தி பேராசிரியர் எஸ்.தில்லைநாதன், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் க. அருணாசலம், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி துரை. மனோகரன் ஆகிய தமிழறிஞர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இவ்விழாவில் பிரபல எழுத்தாளரும் 'மல்லிகை' சஞ்சிகையின் ஆசிரியருமான திரு டொமினிக் ஜீவா, பிரபல மூத்த பெண் வானொலி அறிவிப்பாளரான திருமதி இராஜேஸ்வரி சண்முகம், தமிழ் இலக்கியக் காவலரும், பிரபல வெளியீட்டாளருமான திரு. பூ. ஸ்ரீதரசிங், பன்னூலாசிரியரும் கலாசார அமைச்சின் ஆலோசகருமான அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல் ஆகியோர் விருதுவழங்கி, பதக்கம் அணிவித்து, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். இதில் முக்கியத்துவம் என்னவென்றால் இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக இந்த இலக்கிய விழா, கௌரவிப்பு விழா நிகழ்வுகள் தொகுக்கப்பட்டு 'சுவடுகள்' எனும் பெயரில் ஆவண நூலொன்று வெளியிடப்பட்டமையாகும். 138 பக்கங்களைக் கொண்ட இந்நூல் சிந்தனை வட்டத்தின் 115வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடாக வெளிவந்தது. 1500 பிரதிகள் அச்சிடப்பட்ட இந்நூலின் நூலாசிரியர் எம். ஆர். எம். ரிஸ்வி ஆவார்.

அத்துடன் 2002 மார்ச் மாதம் உடத்தலவின்னையில் வைத்து பிரபல மூத்த வானொலி அறிவிப்பாளர் ஜனாப் பீ.எச். அப்துல் ஹமீட் அவர்களையும் சிந்தனை வட்டம் கௌரவித்துள்ளது.

மேலும் சிந்தனை வட்டத்தின் 200வது நூல் வெளியீட்டு விழா கடந்த 2005-09-11ம் திகதி உடத்தலவின்னை மடிகே க/ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரியின் ''எம்.எச்.எம். அஷ்ரப் கேட்போர் கூடத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. 100க்கு மேற்பட்ட முஸ்லிம் எழுத்தாளர்கள் கலந்து கொண்ட இப்பெரு விழாவில் ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த மூத்த நூலகவியாலாளர் என். செல்வராஜா, சிரேஷ்ட பத்திரிகையாளர் எம்.பீ.எம் அஸ்ஹர், (பிரதம ஆசிரியர் - நவமணி) மூத்த சிறுகதை எழுத்தாளர் நயீமா சித்தீக், மூத்த கவிஞர் கல்ஹின்னை ஹலீம்தீன், இலக்கிய காவலர் என்.எல்.எம். ரஷீன் ஆகியோரை முறையே எழுத்தியல் வித்தகர், இதழியல் வித்தகர், சிறுகதைச் செம்மணி, இருமொழி வித்தகர், சமூக சேவை செம்மல் ஆகிய பட்டங்களை வழங்கி கௌரவித்தது.

சிந்தனை வட்டத்தால் இதுவரை கௌரவிக்கப்பட்ட அனைவரினதும் குறிப்புகள், புகைப்படங்கள் அடங்கலாக நினைவுப் பதிவு புத்தகமொன்றினை வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. 'இரண்டாவது சுவடு' எனும் பெயரில் இந்நூல் வெளிவர வுள்ளது.

## ஆய்வு நடவடிக்கைகள்.

அதேநேரம் 'சிந்தனை வட்டம்' ஆய்வுரீதியான நடவடிக்கை களில் ஈடுபட்டுவரும் செயற்பாடானது; ஏனைய வெளியீட்டு





அமைப்புக்களில் இருந்து மாறுபட்ட போக்கினை எடுத்துக் காட்டுகின்றது. இலங்கையைப் பொருத்தமட்டில் தமிழ்பேசும எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் தமிழை வளர்ப்பதில் முக்கிய பங்களிப்பினை நல்கியுள்ளனர். இவர்களைப் பற்றிய பூரணத்துவமான ஆய்வுகள் இதுவரை காலமும் மேற்கொள்ளப்படாமலிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். இத்தகைய பணியினை 'சிந்தனை வட்டம்' ஆரம்பித்து செயற்படுத்தி வருவது பாராட்டக்கூடிய ஒரு விடயமாகும்.

இதன் முதற்கட்டமாக இலங்கையில் தமிழ்மொழியை வளர்ப்பதில் பங்களிப்பு நல்கிவரும் முஸ்லிம் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களின் பணி பற்றி 'சிந்தனை வட்டம்' தனது சொந்த பணச்செலவில் 'நவமணி' தேசிய பத்திரிகையுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் ஆய்வொன்றினை மேற்கொண்டது.

சிந்தனைவட்ட முகாமைத்துவப் பணிப்பாளரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்விலிருந்து: 19-ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் இருந்து 21-ம் நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதிவரை 2800க்கும் மேற்பட்ட முஸ்லிம் எழுத்தாளர்களும், 1250க்கும் மேற்பட்ட முஸ்லிம் ஊடகவியலாளர்களும், 300க்கும் மேற்பட்ட முஸ்லிம் கலைஞர்களுமாக மொத்தம் 4350க்கு மேற்பட்டோர் இலங்கையில் தமிழ் வளர்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இத்தகையோரின் விபரங்களைத் தொகுத்து ''இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு' எனும் தலைப்பில் ஆறு தொகுதிகளை சிந்தனைவட்டம் வெளியிட்டுள்ளது. கலாபூஷணம் புன்னியாமீன் மூலம் எழுதப்பட்ட இந்த ஆறு நூல்களும் சிந்தனைவட்டத்தின் 189வது (ISBN 955-8913-14-6), 193வது (ISBN 955-8913-16-2), 200வது (ISBN 955-8913-20-2), 239வது (ISBN 955- 8913-63-4), 240வது (ISBN 955-8913-64-2), 241வது (ISBN 955- 8913-65-0) வெளியீடுகளாக வெளிவந்துள்ளன. மேலும் 2007இல் இது குறித்த ஆய்வுகளை 'எங்கள் தேசம்' பத்திரிகையின் அனுசரணையுடன் மேற்கொள்ளவும், இதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து மேலும் பல தொகுதிகளை வெளியிடவும் திட்டமிட்டுள்ளது.

இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களின் விபரங்களைத் திரட்டி ஆய்வுகளை மேற்கொண்டு ''ஆவணப்படுத்தல் நூல்களை'' வெளியிடுவதைப் போல,ஈழத்து புலம் பெயர் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களின் விபரங்களைத் திரட்டி 'புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு' முதலாம் பாகம் (ISBN: 955-8913-55-3 ) எனும் நூலினைத் தனது 236வது வெளியீடாக வெளியிட்டது. இந்நூலில் பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 25 ஈழத்து புலம்பெயர் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களின் விபரங்கள் இடம்பெற்றுள்ளன. இது குறித்து தொடர் தகவல் திரட்டல்களை சிந்தனை வட்டம் மேற்கொண்டு வருவதுடன் எதிர்காலத்திலும் 'புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு' தொடர்பான பல பாகங்களை வெளியிடத் திட்டமிட்டுள்ளது. பிரித்தானியாவில் 'தேசம்' சஞ்சிகை, 'உதயன்' பத்திரிகை, ஜெர்மனியில் 'மண்' சஞ்சிகை உட்பட பல்வேறு புலம் பெயர் தமிழ் ஊடகங்கள், ஊடக அனுசரணையை வழங்கி வருகின்றன.

## எதிர்காலத் திட்டங்கள்

''நாளைய சந்ததியின் இன்றைய சக்தி'' என்ற பணிக்கூற்றிற்கமைய 2008ம் ஆண்டிலிருந்து; ஆண்டொன்றுக்கு குறைந்தது பத்து தமிழ் இலக்கிய நூல்களை வெளியிடும் திட்டத்தினை 'சிந்தனை வட்டம்' கொண்டுள்ளது. இதில் வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்கள் 'ஏழு' பேருக்காவது இடம்வழங்க வேண்டும் என்பது அடிப்படை எதிர்பார்ப்பாகும்.





இத்திட்டத்திற்கு மேலதிகமாக ஆய்வு அடிப்படையிலான இரண்டு திட்டங்களைக் கொண்டுள்ளது.

1, இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களின் விபரங்களைத் திரட்டி ஆய்வுகளை மேற்கொண்டு ''ஆவணப்படுத்தல் நூல்களை'' வெளியிடுவதைப் போல, இலங்கை தமிழ் எழுத்தாளர்கள், தமிழ்க்கலைஞர்கள், தமிழ் ஊடகவியலாளர்களின் விபரங்களைத் திரட்டி 'இலங்கை தமிழ் எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஊடகவியலாளர்களின் விபரத்திரட்டு' எனும் நூல் தொடரை வெளியிடல். இம்முயற்சிக்கு இலங்கையில் முன்னணி இலக்கிய சஞ்சிகையான 'ஞானம்' ஊடக விளம்பர அனுசரணையை வழங்க முன்வந்துள்ளது.

2, இலங்கையிலும், புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் தமிழ்பேசும் எழுத்தாளர்கள் வெளியிட்ட, வெளியிட்டு வருகின்ற சஞ்சிகைகள், சிறுபத்திரிகைகளின் விபரங்களைத் தொகுத்து; அவற்றை ஆவணப்படுத்தும் அடிப்படையில் நூல்களை வெளியிடல்.

## மதிப்பீடு

''சிந்தனை வட்டம்'' தனது ஆரம்ப காலகட்டங்களில் தான் வெளியிட்ட நூல்களில் வெளியீட்டுத் தரத்தினை சரியான முறையில் பேணவில்லை. ஆனால் 2000 ஆண்டிலிருந்து தான் வெளியிடும் சகல நூல்களையும் சர்வதேச நியமங்களுக்கு உட்பட்டு; சர்வதேச தரத்தில் வெளியிட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

நூல்களை வெளியிடுவதில் மாத்திரம் தனது பணியினைச் சுருக்கிக் கொள்ளாமல் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் தமிழ்வளர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் நிறுவனரீதியில் பாராட்டி கௌரவித்து வருவது விசேடத்துவமான ஓர் அம்சமாகும்.

அதேநேரம் 'சிந்தனை வட்டம்' ஆய்வுரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் செயற்பாடானது; ஏனைய வெளியீட்டு அமைப்புக்களில் இருந்து மாறுபட்ட போக்கினை எடுத்துக் காட்டுகின்றது. இலங்கையைப் பொருத்தமட்டில் தமிழ்பேசும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் தமிழை வளர்ப்பதில் முக்கிய பங்களிப்பினை நல்கியுள்ளனர். இவர்களைப் பற்றிய பூரணத்துவமான ஆய்வுகள் இதுவரை காலமும் மேற்கொள்ளப்படாமலிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். இத்தகைய பணியினை 'சிந்தனை வட்டம்' ஆரம்பித்து செயற்படுத்தி வருவது பாராட்டுக்குரியதே.

## முகவரி

வரையறுக்கப்பட்ட 'சிந்தனை வட்டம்'
வெளியீட்டாளர்கள் (தனியார்) கம்பனி
இல 14 உடத்தலவின்னை, மடிகே
உடத்தலவின்னை 20802
ஸ்ரீலங்கா.

தொலை பேசி: 0094 - 812 - 493746
0094 - 812 - 493892
தொலை நகல்: 0094 - 812 - 297246



நூல்தேட்டத்தில் ஈழத்து தமிழ்மொழி எழுத்தாளர்களாகிய தங்களது புத்தக விபரங்களும் பதிவாக வேண்டுமாயின் பின்வரும் மாதிரிக்கமைய விபரங்களை எழுதி நூலின் 1ம், 2ம் பக்கங்களின் புகைப்படப் பிரதியுடன் கீழ்வரும் முகவரிக்கு நேரடியாக அனுப்பி வையுங்கள். நூலின் ஒரு பிரதி அனுப்பப்படுமிடத்து ஆய்வு அடிப்படையில் எழுதுவது இலகுவாக அமையலாம்.

**N. SELVARAJAH**
48, HALLWICKS ROAD
LUTON, BEDFORDSHIRE
LU2 9BH,
U.K.
T/P : 0044 1582 703 786

### நூல்தேட்டம் - நூல் விபரப்பதிவுத்தாள்

நூலின் தலைப்பு : ..........
உப தலைப்பு : ..........
மூல ஆசிரியர் : ..........
மொழிபெயர்ப்பாளர் / தொகுப்பாசிரியர்
..........
வெளியிட்ட இடம் : ..........
முகவரி : ..........
எத்தனையாவது பதிப்பு : ..........
ஆண்டு : .......... மாதம் : ..........
முன்னைய பதிப்புகள் இருப்பின் விபரம் :
பதிப்பு : .......... ஆண்டு : .......... மாதம் : ..........
அச்சிட்ட இடம் : ..........
முகவரி : ..........
ரோமன் பக்கங்கள் : .......... அரபிலக்க பக்கங்கள் : ..........
விலை : .......... அளவு : .......... (நீளம்xஅகலம் சென்.மீற்றரில்)
ISBN : ..........சிறப்பம்சங்கள் : ..........
நூல் பற்றிய சுருக்க அறிமுகம் : ..........
..........
..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் வெளிவருகிறது

# நூல்தேட்டத்தில்

# சிந்தனைவட்டம்

தொகுப்பாசிரியர் :

## என்.செல்வராஜா

ஐக்கிய இராச்சியம்

நூல்தேட்டம் முதல் ஐந்து தொகுதிகளிலும் பதிவாக்கப்பட்ட சிந்தனைவட்ட வெளியீடுகள் இப்புத்தகத்தில் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிறுவன ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பெரும் பணியொன்றினை, தமிழரான தனியொருவரால் மேற்கொள்ளவும் முடியும் என்பதை செயலில் காட்டி சாதனை படைத்து வருபவர் மூத்த நூலகவியலாளரான திரு. என்.செல்வராஜா அவர்கள். ஈழத்தவரின் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தும் பணியை 1990இல் தொடங்கி 2006 வரை நான்கு தொகுதிகளை, ஒவ்வொன்றிலும் ஆயிரம் நூல்களாக ''நூல்தேட்டம்'' என்ற பெயரில் இவர் வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பொதுநூலக ஆலோசனைக் குழு உறுப்பினர், இலண்டன் தமிழர் தகவல் நிலைய நூலக சேவைகளின் ஆவணக் காப்பகப் பிரிவின் இயக்குநர், ஜேர்மனியிலுள்ள சர்வதேச புலம்பெயர் எழுத்தாளர் சங்க ஆலோசகர், ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கக் காப்பாளர், அயோத்தி நூலக சேவையின் ஸ்தாபகர்-நிர்வாக இயக்குநர் என்னும் பல பதவிகளை சமூக நோக்குடன் வகித்துவந்துள்ள திரு. செல்வராஜா, நூல்தேட்டம் 5வது தொகுதியின் தொகுப்புப் பணியினையும், ஈழத்தமிழரின் ஆங்கில நூல்களைப் பட்டியலிடும் பணியினையும், மலேஷிய எழுத்தாளர் சங்கத்துக்காக, மலேசிய நூல்தேட்டம் ஒன்றினைத் தொகுத்து வெளியிடும் பணியினையும், இலங்கையில் வெளியான 150 சிறப்புமலர்களின் விபரங்களைத் தொகுத்து சிறப்பு மலர்களுக்கான வழிகாட்டி (தொகுதி 01)எனும் நூலை வெளியிடும் பணியினையும் தற்போது மேற்கொண்டுள்ளார்.

இங்கிலாந்தின் லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் IBC அனைத்துலக ஒலிபரப்புச் சேவையில் வாராந்த ''காலைக் கலசம்'' இலக்கியத் தகவல் திரட்டினை 2002 முதல் வழங்கி வருகிறார். தாயகத்திலும் புகலிடத்திலும் ஊடகங்களில் பல கட்டுரைகளைத் தொடர்ச்சியாக எழுதி வருகின்றார். இதுவரை இவரால் **18** நூல்கள் எழுதி வெளியிடப்பட்டுள்ளன. இவரின் இத்தகைய பணிகளுக்காக 2004இல் கனடாவின் ''தமிழர் தகவல்'' சிறப்பு விருதும், 2005இல் இலங்கையில் சிந்தனை வட்டம் ''எழுத்தியல் வித்தகர்'' விருதும் வழங்கி கௌரவித்தன.

**ISBN - 978-955-8913-69-7**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org